Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விலை: ரூபா 8.00

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 கார்த்திகை 10 ஹிஜ்ரி 1428 ஷவ்வால் 22 (25.11.2005) வெள்ளிக்கிழமை இதழ் 56

Dialog டயலொக்

kit

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Sri Murugan
Tele Communication & Agency
Post Office.
303, K.K.S. Road, Jaffna.

T.P: 021 222 5392,
Fax: 222 3214
E.Mail: srimurugan@eureka.lk

## மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகள் இன்று தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பம்!

யாழ்ப்பாணம் —

தமிழீழ தேசிய எழுச்சி நாள் நிகழ்வுகள் இன்று காலை 8 மணிக்கு தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகவுள்ளன.

பொதுச்சுடர் ஏற்றல், தேசியக் கொடியேற்றல், திருவுருவப் படத்துக் கான ஈகச்சுடரேற்றல், மலர் வணக்கம், அக வணக்கம், உறுதியுரை எடுத்தல், நினைவுரைகள் என்ற ஒழுங்கில் எழுச்சிநாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மாவீரர் துயிலும் இல்லங்களில் இன்று காலை 8 மணிக்கு ஏற்றப்படும் தேசியக்கொடி நாளை மறுதினம் மாவீரர் நாள் நிகழ்வுகள் முடிவடைந்ததும் இறக்கப்படும்.

பொது நிறுவனங்கள், பாடசாலைகளில் இன்று முதல் நாளை மறுதினம் வரை ஒவ்வொரு நாளும் பணி முடிந்த பின் பிற்பகல் 12.1 மணிக்குப் பின் 6 மணிக்கு முன்பாக தேசியக்கொடி இறக்கப்படும். இதற்கான ஒழுங்குகள் அனைத்து இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவீரர் நாளை உணர்வெழுச்சியுடன் நடத்துவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் தமிழர் தாயகம் எங்கும் இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சி, பரந்தன் நகரப் (12 ஆம் பக்கம்பார்க்க)

## பருத்தித்துறையில் கிரனேட் வீச்சு; ஐந்து இராணுவத்தினர் காயம்!

யாழ்ப்பாணம் —

பருத்தித்துறை முதலாம் கட்டைச் சந்திப்பகுதியில் நேற்றிரவு 7.45 மணியளவில் படையினர் சென்ற உழவு இயந்திரம் மீது இனந்தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் 5 படையினர் காயமடைந்தனர்.

இதனையடுத்து படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தின் போது காயமடைந்த 5 படையினரும் உடனடியாக பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலில் அல்வாயைச் சேர்ந்த தங்கவேலாயுதம் தவேந்திரன் (வயது 20) என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் உடனடியாக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக (12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் உதவியைப் பெற தடைவிதிக்கின்றது ஜே.வி.பி!



கொழும்பு —

இலங்கை சமாதான முயற்சிகளில் நோர்வேயின் உதவியை நாடக் கூடாது என்றும் -

வடக்கையும் - கிழக்கையும் நிரந்தரமாகப் பிரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஜே.வி.பி. வலியுறுத்திக் கேட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க தமது கட்சியின் நிலைப்பாடுகள் தொடர்பாக எடுத்துக்கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது -

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்வதற்கு ஜே.வி.பியால் செய்யவேண்டிய வேலைத்திட்டங்களை மிகவும் சிறந்த முறையில் செய்துள்ளோமென நாம் நம்புகிறோம். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பில் நிறைவேற்றப்படவேண்டிய கடமைகளும், பொறுப்புகளும் நிறைவேற்றப்படுமெனவும் நாம் நம்புகிறோம்.

இதன்படி மகிந்த ராஜபக்ஷவின் எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்து அவதானத்துடன் நாம் உள்ளோம்.

மகிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜே.வி.பி ஆதரவை வழங்கும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் நியமனம் குறித்து சுதந்திரக் கட்சிக்குள் முரண்பாடு!

### பலர் பதவி விலகுவதாக மிரட்டல்

கொழும்பு —

அமைச்சர்களின் நியமனம் குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பெரும் மோதல்கள் உருவெடுத்திருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் 25 அமைச்சர்கள், 23 அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள், 29 பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

ஆனாலும் அமைச்சர்கள் ஒதுக்கீடு தொடர்பாக கட்சியின் உயர்மட்டத்தில் பலத்த அதிருப்தி நிலவுவதாகக் கூறப்படுகிறது.

அமைச்சராக பதவியேற்ற பின்னர் - நேற்று முன்தினம் மாலையே சிறிபதி சூரியாராச்சி பதவி விலகியதையடுத்து மேலும் பல தலைவர்கள் தாமும் பதவி விலகப்போவதாக மிரட்டிவருகின்றனர்.

இவர்களில் டி.எம்.ஜயரட்ண மிக முக்கியமானவராவார். பிரதமர் பதவி வழங்கப்படுமென எதிர்பார்த்து ஏமாந்த இவர் - மலைநாட்டு அபிவிருத்தி அமைச்சு தன்னிடமிருந்து பறிக்கப்பட்டது குறித்து கடும் விசனமடைந்துள்ளார்.

அதுபோலவே சுற்றுலாத்துறை பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்ட அர்ஜுன ரணதுங்கவும், அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது தொடர்பாக அதிருப்தியடைந்துள்ளார். இதனால் இவர் நேற்று முன்தினம் இடம்பெற்ற பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

அதுபோலவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சட்ட ஆலோசகரான (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நினைவாலயம் திறந்துவைப்பு!






கிளிநொச்சி —

ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையில் மீட்கப்பட்ட ஆனையிறவுப் பகுதியில் 3000 இற்கும் அதிகமான மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்ட நினைவாலயம் நேற்று திறந்துவைக்கப்பட்டது. நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் மற்றும் மக்கள் என பல்லயிரக்கணக்கானோர் கலந்துகொண் டனர்.

இதில் பொதுச்சுடரை சோதியா படையணி சிறப்புத்தளபதி கேணல் துர்க்காவும், தமிழீழ தேசியக்கொடியை வட போர்முனை கட்டளைத் தளபதி கேணல் தீபனும் ஏற்றிவைத்தனர்.

முதல் மாவீரன் லெப்.சங்கரின் திருவுருவப் படத்துக்கு தமிழீழ மாவீரர் பணிமனை பொறுப்பாளர் பொன்.தியாகமும், முதல் பெண் மாவீரர் 2 ஆம் லெப்.மாலதியின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழினத்தை, தமிழ் தேசியத்தை பலப்படுத்த தலைவரின் பின்னால் அணிதிரள வேண்டும்!



### புலனாய்வு பிரிவு பொறுப்பாளர் பொட்டு அறைகூவல்

கிளிநொச்சி —

தமிழீழத்தையும், தமிழ்த் தேசியத்தையும் பலப்படுத்த தலைவரின் பின்னால் அனைவரும் அணிதிரள வேண்டும் என விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் ச.பொட்டு அம்மான் தெரிவித்தார்.

நேற்று ஆனையிறவில் இடம்பெற்ற மாவீரர் நினைவாலயத்திறப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது -

தமிழினம் தேசிய விழிப்புணர்வு பெற்று நிற்கும் ஒரு பெருமிதமான காலத்தில் நாங்கள் நிற்கின்றோம். சிங்கள தேசியத்தின் தலைமையைத் தெரிவு செய்கின்ற அந்தச் சந்தர்ப்பத்தை நாம் புறங்கையால் புறந்தள்ளி பெருமிதத்துடன் நிற்கின்றோம்.

தமிழினத்தின் தேசியத் தலைமையை நாம் தெரிவு செய்துவிட்டோம். உங்களது தேசியத்தை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்ற தெளிவான செய்தியை தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு சிங்களத்துக்கு ஒரு பாடத்தைக் காட்டியிருப்பது தமிழினத்தின் பலத்தின் வெளிப்பாடுதான்.

உலகிலே தனித்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிறந்த நாள் வாழ்த்துக் கூற அமைச்சர்கள் ஆலோசனை!

கொழும்பு —

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு 51 ஆவது பிறந்த நாள் வாழ்த்தைத் தெரிவித்து - சமாதானப் பேச்சுகளில் ஈடுபட விரும்புவது தொடர்பாக அறிவிக்க வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் ஆலோசனை வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

புதிய அமைச்சரவை நேற்று முன்தினம் பதவியேற்ற பின்னர் - ஜனாபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இவ்வாறு ஆலோசனை வழங்கப்பட் டிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, மாவீரர் தினத்தையொட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் ஆற்றவுள்ள உரை குறித்தும் அமைச்சர்கள் கருத்து தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் எதிர்வரும் 26 ஆம் திகதி (12 ஆம் பக்கம் பார்க்க)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இன்று முதல் ஜெயம் ரவி, ஸ்ரேயா, வடிவேல் நடித்த
வெகு விரைவில் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
சியாம், சினேகா நடித்த **ABCD**
காட்சிகள்:-10.30, 2.30, 6.30, 9.30 (புதிய நேரம்)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
சிறிகாந், ஆர்த்தி அகர்வால் மற்றும் பலர் நடித்த
**பம்பரக் கண்ணாலே**
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

சுன்னாகம் **நாகம்ஸ்**
பார்த்திபன், லஷ்சுமிராய், வடிவேல் மற்றும் பலர் நடித்த
அடுத்த வெளியீடாக அர்ஜுன், நமீதா நடித்த **ஏய்**
காட்சிகள்:-11.00,3.00,7.00, 9.30, 1.00 (ப.நே)

**மனோகரா** யாழ்ப்பாணம்
யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக 4ஆவது வெற்றி வாரமாக....



DIGITAL dts SOUND
ஒலிநயத்துடன் இளைய தளபதி விஜய் வெடிக்கும்
**சிவகாசி**
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

**ராஜா** யாழ்ப்பாணம்
4ஆவது வாரமாக...
**விக்ரம், அசின்**
மணிவண்ணன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
**மஜா**
காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (பு.நேரம்)

# உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு
# வடக்கு - கிழக்கு மாகாண சபை
## வடக்கு – கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் (நீகோட்)

**நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி**

**ஆ.அ.வ கடன் இல:- 2084 - சிறீ (எஸ்எவ்)**

# கேள்வி அறிவித்தல் இல:61

1. வடக்கு – கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் (NECORD - Ext) ஆகு செலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (''ஆ.அ.வ'') கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ், தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக் கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னால் தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

### அட்டவணை

| ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ருபா) |
|---|---|---|---|
| NEP/NECORD - Ext/ ID/01 & 02 | திருகோணமலை, வரோதய நகரில் இரண்டு, மூன்று மாடி அலுவலர் விடுதி அமைத்தல் | M4 கட்டடங்கள் | 307,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்த்காரரகளும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவரகள் ஆவர.

I. நரமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிரமாண ஒப்பந்தகாரர பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிரமாண ஒப்பந்தகாரர சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளரகளிடமிருந்தோ அல்லது உசாவலரகளிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப் படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர வேண்டப்படுகின்றனர.

IV. ''ICTAD'' வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தகாரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன், ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. ஆர்வமுள்ள, தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை திட்டப் பணிப்பாளர், நீகோட் திட்டம், 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம்.
(தொலைபேசி:- 026 – 2227434. ∴பக்ஸ்:– 026 – 2227401. இணையதள முகவரி:- www.necord.org ஈமெயில்:- necord@sltnet.lk)
6. கேள்வி ஆவணங்களை 25.11.2005 இலிருந்து 12.12.2005 வரை, காலை 9.30 இலிருந்து, மாலை 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணம் ருபா 2,000/– ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்டகேள்விச் சபை, ''நீகோட்'', 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு, 19.12.2005 காலை 11.30மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
9. முன்கூட்டியே கேள்விகோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 12.12.2005 ஆம் திகதி அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக மாட்டார்.

**த.லங்காநேசன்,**

**தலைவர், கேள்விச்சபை,**

**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம்,**

**55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை.** (C/4839)

**CARITAS - HUDEC**
**JAFFNA**

# VACANCY

## 1.Communication Officer

**Base Station : Jaffna**

### Main Duties:

- Organizes the logistics of (national and international) media visits Caritas - HUDEC (Arranges clearances,accommodation, travels, etc.)
- Regularly accompanies the visitors on field trips, presents programme activities. is in charge of translation, and ensures a good understanding by the visitors of the Caritas - HUDEC Program activities.
- Assists i n the development and production of communication tools and materials for journalists and visitors (maps, background papers, fact sheets, press releases and other data such as photos, interviews and updated activity reports)
- Keeps abreast of development in local national affairs.

### Skills Required:

- Fluency in Tamil and English
- Good writing and editing skills
- Information gathering skills, good knowledge
- Good interpreting and translating skills
- Ability to work in the field and travel regularly, including in the vanni area, possibly during the weekend
- Good team player with good communications skills
- Proficient computer skills (Microsoft Office, Internet, Photoshop)
- Experience in media relation, journalism, of corporate communication
- Knowledge of Caritas - HUDEC Tsunami programmes a plus

**Caritas - Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.**

**if you would like to be a party of dedicated team in a humanitarian context, Please send us your CV & motivation letter including your contacts & minimal two references to the following address, latest by *3 DECEMBER 2005***

**Father Jeyakumar,**
**Caritas - Hudec,**
***14, Mathew's Road, Deougu Street,***
***Jaffna.***

or E-mail:hudec@sltnet.lk

PLEASE SPECIFY THE POST YOU APPLY FOR IN YOUR APPLICATION WITH CONTACT TELEPHONE NUMBERS.

(C/4843)

# எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் எமது உரிமையைத் தரப்போவதில்லை!

## மட்டக்களப்பு கூட்டத்தில் கேணல் பானு



கொழும்பு —

அரசாங்கங்கள் காலத்துக்குக்காலம் மாறிக் கொண்டிருந்தாலும், எந்த அரசும் எமது உரிமையைத் தரப் போவதில்லை. நாம் அதனைப் போராடித்தான் பெற வேண்டும். அதற்காகவே இத்தனை மாவீரர்களை இழந்தோம். அவர்களது கனவுகளையும், மக்களது அவாவையும் எமது தலைவர் நிறைவேற்றுவார் என மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வெல்லாவெளிக் கோட்டத்துக்குட்பட்ட மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு கரடியனாறு மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே மட்டக்களப்பு மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் - எமது சமூகம் இருக்கும் வரை காலா காலமாக இந்த மாவீரர்களின் சரித்திரம் வரலாறாக தமிழீழத்தில் பொறிக்கப்பட்டு இருக்கும். எங்களது சமூகம் விடுதலை பெறவேண்டும். எங்களது சமூகம் சுதந்திரமாக வாழ வேண்டும். தமிழீழ மலர வேண்டும் என்பதற்காக 17904 மாவீரர்களை இந்த மண் இழந்து நிற்கிறது.

தமிழர் தேசம் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்டபோதுதான் தலைவர் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

உண்மையில் ஒரு மனிதன் தனது உயிரைத் தேசத்துக்காக விடுவது என்பது உன்னதமானது. அது எல்லோராலும் முடியாத ஒன்றாகும். அந்த உன்னதத்தை உங்களது பிள்ளைகள் செய்து இருக்கிறார்கள். அந்த வகையில் மாவீரர்களின் பெற்றோர்களாகிய நீங்கள் சந்தோசப்பட வேண்டியவர்கள், கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்.

எமது சமூகம் ஒடுக்கப்பட்டு, அடக்கப்பட்ட காலத்தில் எவரும் எம்மைப் பற்றி கேட்கவில்லை. ஆனால் இன்று பல நாடுகள் எங்களை நாடி வருகிறது. அதற்கு வித்திட்டவர்கள் உங்களின் பிள்ளைகளாகிய எங்களது மாவீரர்களே.

தமிழீழத்துக்கு உறுதியான தலைவன் இருக்கிறான். அவர் ஒரு போதும் இந்தத் தியாகிகளின் தியாகங்களை விலை பேச மாட்டார். எமது போராட்டம் பல நெருக்கடிகளைத் தாண்டி வந்துள்ளது.

உலகத்தில் நான்காவது வல்லரசாக இருந்த இந்தியாவை எதிர்த்தார். அன்று ஆயிரத்துக்கும் குறைந்த போராளிகளைக் கொண்டு அவர்களை எதிர்த்து வெற்றியும் கண்டவர் தலைவர். அவ்வாறான உன்னதமான தலைவன் இருக்கிறார். நாம் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை.

இன்று உலகமே இந்த மாவீரர்களின் சாதனைகளை எண்ணி வியந்து நிற்கிறது. இந்த மாவீரர்களின் நினைவு நாள் உலகத்தில் தமிழர்கள் வாழ்கின்ற அனைத்து நாடுகளிலும், புனிதமான நாளாக அனுஷ்டிக்கப்படுகிறது.

அந்த மாவீரர்களைப் பெற்றதனால் நீங்கள் இந்த மண்ணில் பெருமைக்குரியவர்கள். மக்கள் தான் எமது பலம். மாவீரர்கள் தான் எமது சக்தி. அவர்களது கனவு நனவாகும் காலத்தில் நாம் நிற்கின்றோம் எனத் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்ட துணைத் தளபதி ரமணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையனும் உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு, துணைத் தளபதி ரமணன், தளபதி நாகேஸ், அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்நிலவு, மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மணிவண்ணன், மாவட்ட கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் தமிழாார்வன், மாவட்ட நிதர்சனப் பொறுப்பாளர் வரதன், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் கீர்த்தி, ஜெயந்தன் படையணித் தளபதி ஜெயார்த்தன், மகளிர் படையணித் தளபதி சுகந்தினி, மாவட்ட தலைமைச் செயலகப் பொறுப்பாளர் அம்பி மற்றும் மனோ மாஸ்ரர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நாடாளுமன்ற அமர்வு இன்று ஆரம்பம்!

கொழும்பு —

ஆறாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு இன்று ஆரம்பமாகவுள்ளது.

இதனை முன்னிட்டு கொழும்பில் பல வீதிகள் தற்காலிகமாக போக்குவரத்துக்காக தடைசெய்யப்படவுள்ளன.

அலரி மாளிகையில் இருந்து நாடாளுமன்ற கட்டடம் வரை இந்தப் பாதைபோக்குவரத்து தடை அமுல்செய்யப்படவுள்ளதாக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதன்படி இன்று முற்பகல் 9 மணிமுதல் 10.30 வரையிலும், பின்னர் முற்பகல் 11 மணியில் இருந்து பிற்பகல் 2 மணிவரையிலும் போக்குவரத்து தடை செய்யப்படவுள்ளது. (01)

## கிழக்கில் முக்கிய தாக்குதலுக்கு புலிகள் தயாராகின்றனராம்!

### இராணுவப் புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு —

மாவீரர்வாரத்தில் முக்கிய தாக்குதலொன்றை நடத்துவதற்காக விடுதலைப்புலிகளின் 350 உறுப்பினர்கள் மட்டக்களப்பு - வாகரைக்கு வந்துள்ளதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவு எச்சரித்துள்ளது.

தற்போதைய மாவீரர் வாரத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளது. இவ்வாறு ஒன்றுகூடிய புலிகளுக்குப் பொறுப்பாளராக கிழக்கு மாகாண தளபதிகளில் ஒருவரான நாகேஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் தனது நடவடிக்கைகளை வாகரைக்கு வெளியிலிருந்து செயற்படுத்தி வருகிறார்.

கட்டுமுறிவு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாயிலிருந்து பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர். இவர்கள் இந்த வாரத்தில் கருணா குழு மீது பாரிய தாக்குதலை நடத்தவுள்ளனரா? அல்லது படையினர் மீது தாக்குதல்களை நடத்த தயாராகி வருகின்றனரா என கணிப்பதற்கு முடியாமலுள்ளது என புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச செயற்பாடுகள் குறித்து விபரங்களை படையினர் பெற்றுக் கொள்ள முடியாத நிலையுள்ளதாகவும் படைஅதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தே)

## சிங்கள மக்கள் யுத்தத்தை விரும்பினால் நாமும் முழு மனதுடன் ஏற்றுக்கொள்வோம்

### திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன்



திருகோணமலை —

சிங்கள பெரும்பான்மையினத்தவர்கள் யுத்தத்துக்கு விருப்பம் தெரிவித்து ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்து புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்துள்ளனர். அவர்கள் யுத்தத்துக்கான முனைப்பினை மேற்கொள்கின்றனர். சிங்கள மக்கள் யுத்தத்தை விரும்புபவர்களாயின் அதனை நாமும் முழு மனதோடு ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கிறோம் என திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் தெரிவித்தார்.

திருமலை மாவட்ட மாவீரர் பெற்றோர் கௌரவிக்கும் நிகழ்வு கணேசபுரம் மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் மூதூர் கிழக்கு பகுதி மாவீரர்களின் பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர்.

மாவீரர்கள் செய்த அளப்பரிய தியாகத்தின் காரணமாக இன்று நாட்டில் ஓரளவு அமைதி நிலவுகிறது. இருப்பினும் அவர்களது எண்ணங்கள் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை. நாம் மிகுந்த பலத்துடனேயே இருக்கிறோம்.

நாம் பலமாக இருந்ததன் காரணத்தாலேயே இலங்கை அரசாங்கம் எம்மை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கின்ற காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் எமது போராளிகள் கொல்லப்பட்டுக்கொண்டு இருக்கின்றனர். நாம் இன்னமும் பொறுமை காத்துக்கொண்டிருக்கிறோம்.

யுத்தகாலத்தைக் காட்டிலும் சமாதான காலத்தில் நாம் பெரும் எண்ணிக்கையான மாவீரர்களை இழந்துள்ளோம். இருப்பினும் தலைவரது தீர்க்கதரிசனமான சிந்தனை காரணமாக நாம் அமைதி காத்துவருகிறோம். எம்மை எவராது சீண்டிப் பார்க்க முனைந்தால் அதன் விளைவுகள் விபரீதமாக இருக்கும்.

நாம் யுத்தத்தை விரும்புபவர்கள் அல்ல. அதன் கொடுமை எங்களுக்குத் தெரியும். யுத்தத்தின் காரணமாக பல கோடிக்கணக்கான சொத்துக்களை எமது மக்கள் இழந்துள்ளனர். எமது நடவடிக்கைகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் முடக்கப்பட்டிருக்கின்றது. எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு பொருளாதாரத் தடைகளை அரசாங்கம் மறைமுகமாக ஏற்படுத்தி வருகிறது. இராணுவம் எம்மீது மறைமுக யுத்தத்தை ஆரம்பித்துள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையில் கட்டைபறிச்சான் பாதை பொதுமக்கள் போக்குவரத்துக்காக 24 மணி நேரமும் திறந்து விடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது இராணுவத்தினர் இரவு 7 மணியுடன் அதனை மட்டுப்படுத்துகின்றனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் தற்காலிக வீடுகளிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு பல நிறுவனங்கள் தயாராக இருக்கின்ற போதும், கட்டட நிர்மாணப் பொருட்களைக் கொண்டு வருவதற்கு இராணுவம் தடைவிதிக்கிறது.

இவற்றுக்கு எல்லாம் யுத்தம் மூலம்தான் தீர்வு என்றால், அதனைச் செயற்படுத்துவதற்கு நாம் எம்மைத் தயாராக்கிக்கொள்ள வேண்டும். இதன்மூலம் மாவீரர்களின் எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கமுடியும் என அவர் தெரிவித்தார்.

## ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாக புகார்!

கொழும்பு —

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக வாக்களித்த அரச ஊழியர்கள் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தி வருவதாகவும் - அத்தகைய சம்பவங்களை தாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாதென்றும் ஐ.தே.கட்சி எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.தே.க பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்டுள்ள அறிக்கையில்-

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் வெற்றிக் கொண்டாட்டங்களையடுத்து, ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களித்த அரச ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

பணியிடங்களில் உள்ள அரச ஊழியர்களை முகமூடி அணிந்த மனிதர்கள் தாக்கிவருகின்றனர். பொற்றோலிய கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் 234 ஊழியர்களுக்கு கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.கவின் செயற்குழு உறுப்பினர்களான றோசி சேனநாயக்க மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் இத்தகைய கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளது. எமது கட்சி ஆதரவாளர்கள் தாக்கப்படும்போது நாம் அமைதி காக்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சிங்கள, பௌத்தர்களை குறிவைத்து ஐ.தே.கவை மறுசீரமைக்க யோசனை!

கொழும்பு —

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளராக எம்.எச்.முகமட் நியமிக்கபபட்டிக்கிறார். அதே வேளை, பௌத்தர்களின் வாக்குகளைக் கவரும் வகையில் கட்சியை மறுசீரமைக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவினது வெற்றி சிங்கள - பௌத்த வாக்குகளினால் மட்டுமே பெறப்பட்டுள்ளது என்பதால் சிங்களக் கட்சி என்ற அடையாளத்தையும், சிங்கள - பௌத்த வாக்குகளைப் பெறும் வகையிலான கட்சித் தலைமையே தற்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தேவை என்றும் அந்தக்கட்சியில் கருத்து வலுவடைந்து வருகிறது.

மேலும், ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி பல தேர்தல்களில் தோல்வியடைந்து வருவதால் கட்சித் தலைமையில் மாற்றம் அவசியம் என்றும், கட்சித் தலைமையை மாற்றியமைக்க இது நல்ல சந்தர்ப்பம் என்றும் ஐ.தே.கவினர் கூறிவருகின்றனர்.

இருப்பினும், தமிழ் மக்கள் வாக்களிக்காத நிலையிலும் 47 இலட்சம் வாக்குகளை ரணில் விக்கிரமசிங்க பெற்றுள்ளதால் அவர் கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகத் தேவையில்லை என்று ஐ.தே.க வின்மூத்த தலைவர்கள் சிலர் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இனப்பிச்சினைக்குத் தீர்வாக ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த கூட்டாட்சி முறையிலான தீர்வு என்பதை சிங்கள - பௌத்தர்கள் தவறுதலாகப் புரிந்துகொண்டு நாட்டை பிளவு படுத்திவிடும் என்று எண்ணிவிட்டதாகவும், அதனாலேயே வாக்குகள் சரிந்தன என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயங்களை விவாதிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் மற்றும் செயற்குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்தது. இந்த இரு கூட்டங்களும் இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.


இதனிடையே, ஐ.தே.கவின் நுவரெலியா நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட சிலர் சுதந்திரக் கட்சிக்குத் தாவ வுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், தான் சுதந்திரக் கட்சியில் ஒருபோதும் இணையமாட்டேன் என்று நவீன் திஸநாயக்க அந்தச் செய்திகளை மறுத்துள்ளார்.

தேர்தலில் ஐ.தே.க தோல்வியடைந்ததையடுத்து தவிசாளர் பொறுப்பிலிருந்து மலிக் சமரவிக்கிரம விலகியதையடுத்து எம்.எச் மொகமட் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.



# சமநிலையில் முடிந்த பைசலாபாத் டெஸ்ட்!









இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பைசலாபாத்தில் நடைபெற்றுவந்த 2 ஆவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதல் இன்னிங்ஸில் 462 ஓட்டங்களைப் பெற்றிருந்த பாகிஸ்தான் அணிக்கெதிராக இங்கிலாந்து அணி 446 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்திருந்தது.

2 ஆவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 6 விக்கெட் இழப்புக்கு 183 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 4 ஆம் நாள் ஆட்டம் முடிவுற்றிருந்தது.

இந்த நிலையில் நேற்று 5 ஆவது நாள் ஆட்டம் தொடங்கியபோது இன்ஸமாமும் நவீட் உல் ஹசனும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். ஆட்டம் தொடங்கிய சற்று நேரத்திலேயே ஹர்மிசனின் பந்துவீச்சில் ஒரேயொரு ஓட்டத்துடன் நவீட் உல் ஹசன் வெளியேறினார்.

அடுத்து இன்ஸமாமுடன் அக்தர் இணைந்துகொள்ள பாகிஸ்தான் அணி நிதானமாக நின்று பிடித்தது. ஓட்ட எண்ணிக்கை 234 எட்டும்வரை தாக்குப்பிடித்த இந்த ஜோடியை ஹொகாட் பிரித்தார். 60 பந்துகளில் 14 ஓட்டங்களை எடுத்திருந்த அக்தர் ஆட்டமிழக்க, அடுத்து மொஹமட் சமி களமிறங்கினார். ஓட்ட எண்ணிக்கை 244 ஆக இருந்தபோது ஐந்து ஓட்டங்களுடன் ஹொகாட்டின் பந்துவீச்சில் அவரும் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்து செல்லநேரிட்டது.

தொடர்ந்து இன்ஸமாமம் - கனேரியா ஜோடி ஆட்டத்தைத் தொடர்ந்தது. இன்ஸமாம் சதமடித்த கையோடு 9 விக்கெட் இழப்புக்கு 268 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது பாகிஸ்தான் அணி.

பந்துவீச்சில் ஹொகாட், பிளின்ரொப் இருவரும் தலா மூன்று விக்கெட்டுக்களையும் ஹர்மிசன் 2 விக் கெட்டுக்களையும் உடல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். 295 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது இங்கிலாந்து அணி.

அக்தரும் நவீட் உல் ஹசனும் அடுத்தடுத்து வீசிய பந்துகளில் இங்கிலாந்து அணியின் முன்னிலை வீரர்கள் ஆட்டமிழந்து செல்ல நேரிட்டது.

ட்ரஸ்கொதிக் ஓட்டமெதையும் பெறாத நிலையில் அக்தரின் பந்தில் போல்ட் ஆன போது அணியின் ஓட்ட எண்ணிக்கை ஒன்றாக இருந்தது.

## விளையாட்டு

அடுத்து அணி 5 ஓட்டங்கள் பெற்றிருக்கையில் நவீட் உல் ஹசனின் பந்தில் ஸ்ரெஸும் ஓட்டமெதையும் பெறாமல் போல்ட் ஆனார்.

அடுத்துக் களமிறங்கிய பெல் - அக்தரின் பந்தில் ஓட்டமெதையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்து சென்றார். இந்த நிலையில் அணித் தலைவர் வோன் - அணியின் ஓட்ட எண்ணிக்கை 20 ஆக இருந்தபோது நவீட் உல் ஹசனின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார். இவர் 9 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

முன்னணி விக்கெட்டுக்கள் சரிந்த நிலையில் பீற்றர்சன் - பிளின்ரொப் ஜோடி இணைந்து கொண்டது. இருவரும் பொறுப்புடன் ஆடியதால் தொடர்ந்து விக்கெட்டுக்கள் சரிவது தடுக்கப்பட்டது.

எனினும், 65 பந்துகளில் 42 ஓட்டங்களைப் பெற்றிருந்த பீற்றர்சன் - அணியின் ஓட்ட எண்ணிக்கை 100 ஆக இருந்தபோது நவீட் உல் ஹசனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து பிளின்ரொப் - ஜோன் ஜோடி ஆட்டத்தைத் தொடர்ந்துகொண்டிருந்தபோது அணியின் ஓட்ட எண்ணிக்கை 138 ஆக இருந்தபோது 6 ஆவது விக்கெட் வீழ்த்தப்பட்டது.

அக்தரின் பந்தில் ஆட்டமிழந்த பிளின்ரொப் - 98 பந்துகளில் 9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 56 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

ஜோன் - கைல்ஸ் ஜோடி தொடர்ந்து விளையாடிக் கொண்டிருந்தபோது இறுதிநாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. ஆட்டநேர முடிவில் 6 விக் கெட் இழப்புக்கு 164 ஓட்டங்களை இங்கிலாந்து அணி பெற்றிருந்ததால் இந்தப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஜோன் 30 ஓட்டங்களுடனும் கைல்ஸ் 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் அக்தரும் நவீட் உல் ஹசனும் தலா 3 விக் கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# இன்றைய கொல்கத்தா போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றிபெறும்!

## நம்பிக்கை தெரிவிக்கிறார் ரொட்ஸ்

கொல்கத்தாவில் இன்று நடைபெறவிருக்கும் இந்திய - தென்னாபிரிக்க அணிகளிடையேயான 4 ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெறும் என்று அந்த அணியின் முன்னாள் வீரர் ஜோன் டி ரொட்ஸ் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஜோன் டிரோட்ஸ். களத்தடுப்பில் வல்லவரான இவர் சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டார் அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது-

கிரிக்கெட் ஆட்டத்தை பொறுத்தவரையில் களத்தடுப்புச் செய்யும்போது கடமைக்காக அதை செய்யக்கூடாது. அதை ஆர்வத்துடன் செய்தால் நல்ல முன்னேற்றம் காணலாம். கொல்கத்தாவில் இன்று நடக்கும் இந்திய - தென்னாபிரிக்கா இடையிலான 4 ஆவது ஒருநாள் போட்டியில் சுமித் தலைமையிலான தென்னாபிரிக்க அணி வெற்றிபெறும் என்ற நம்பிக்கை உள்ளது. கிப்ஸ் மற்றும் போஜே ஆடாதது தென்னாபிரிக்க அணிக்கு இழப்புத்தான். கங்கூலியை அணியில் இருந்து நீக்கியதால் அவர் எவ்வளவு வருத்தப்பட்டிருப்பார் என்பது எனக்குத் தெரியும் எனக் கூறினார்.


## சிறுவிளம்பரம்

### திருமணசேவை

எம்மிடம் உள்நாடு, வெளிநாட்டு அரச, தனியார் நிறுவனாங்களில் பணிபுரியும் இந்து, கிறிஸ்தவ மணமக்களின் ஜாதகங்கள் உள்ளன.



தொடர்பு: 72, கல்யாணவேலன், சர்வதேச திருமணசேவை, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (2119)





(C74844)

# தேசியத் தலைவரின் 51 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு கோப்பாய் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் இரத்ததானம்


தமிமீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 51 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களும், விரிவுரையாளர்களும் இரத்ததானம் செய்தனர்.

இந்த நிகழ்வு நேற்று காலை 8 மணியளவில் கோப்பாய் கல்வியியற்கல்லூரியில் இடம்பெற்றது. தமிழீழ தேசியத் தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு கடந்த வருடமும் கல்வியியற் கல்லூரி சமூகத்தால் இரத்ததானம் செய்யப்பட்டது. அதே போன்று இந்த வருடமும் நூற்றுக்கு மேற்பட்டோர் இரத்தானம் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பொருட்கள் ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் —

யாழ்.நீதிவான் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டதும், இதுவரை உரிமை கோரப்படாததுமான பொருட்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது.

பொதுமக்கள் நீதிமன்ற அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலத்துக்கு முன்னர் பொருட்களைப் பார்வையிடலாம். கொள்வனவுக்குரிய கொடுப்பனவுகள் காசாகவே செலுத்தப்பட வேண்டுமென யாழ்.நீதிவான் நீதிமன்ற பதிவாளர் க.மீரா தெரிவித்துள்ளார்.

## குடாநாட்டில் வெள்ளத்தால் 8327 குடும்பங்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் வெள்ளத்தால் 8327 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக யாழ். செயலகத்துக்கு இறுதியாகக் கிடைத்த புள்ளிவிபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வெள்ளத்தால் இடம் பெயர்ந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு-

யாழ்ப்பாணம் - 729, நல்லூர் - 513, கரவெட்டி - 49, பருத்தித்துறை - 1627, சண்டிலிப்பாய் - 334, மருதங்கேணி - 2319, சாவகச்சேரி - 308, தெல்லிப்பளை - 70, வேலணை - 1005, கோப்பாய் - 84, ஊர்காவற்றுறை - 28, சங்கானை - 25, காரைநகர் - 40, நெடுந்தீவு - 410, உடுவில் - 22

இவற்றில் பருத்தித்துறை மற்றும் வேலணை பிரதேச செயலர் பிரிவுகளிலேயே அதிகளவில் மக்கள் வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளனர். இதேவேளை யாழ்.மாவட்டத்தில் 791 வீடுகளும் வெள்ளத்தால் சேதமடைந்துள்ளன.

இவர்களுக்கான நிவாரணம் மற்றும் உதவிப் பொருட்கள் அந்தந்தப் பிரதேச செயலாளர்கள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## மக்களின் தேவைக்கேற்ப இயங்காத பண்டத்தரிப்பு கிராமிய மருத்துவமனை



பண்டத்தரிப்பு —

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதி மற்றும் ஆண் பெண்களுக்கான நோயாளர் விடுதிகள் இயங்காதிருப்பதால் அங்கு தங்கிச் சிகிச்சை பெறமுடியாதநிலை தொடர்கின்றது.

ரான் (Raan) திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இந்த வைத்தியசாலை கடந்த வருடம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. எனினும், இன்று வரை இந்த விடுதிகள் இயங்கவில்லை என்பதே அந்தப் பகுதி மக்களின் விசனத்துக்குரிய விடயமாகும்.

வைத்தியர்கள் தங்கும் விடுதிகளில் இருந்து அனைத்து கட்டட வசதிகளையும் கொண்ட இந்த வைத்தியசாலையில் தற்போது ஆரம்ப சிகிச்சை மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இந்தக் கட்டடம் கட்டாக்காலி கால்நடைகள் வசிக்கும் இடமாகவும், புறாக்கள் வாழும் இடமாகவும் காணப்படுகிறது.

இந்த வைத்தியசாலையை முற்றுமுழுதாக இயங்கவைக்கும் முகமாக சில்லாலை கிராம அபிவிருத்தி சங்கம், மாதகல் கிராம அபிவிருத்தி சங்கம் போன்ற பொது அமைப்புகளும், பண்டத்தரிப்புவாழ் பொதுமக்களும் கடிதம் மூலம் யாழ். சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : லோ.லேனுஜா
முகவரி : முல்லைத்தீவு.

### அகவை மூன்று




பெயர் : பு.றகியா
முகவரி : கரணவாய்.

### அகவை எட்டு



பெயர் : ந.சாமந்தி
முகவரி : கிளிநொச்சி.


வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ..........
முகவரி : ..........
பிறந்த ஆண்டு : ..........

சுப்பன்கோடு பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..........
பெற்றோர் ஒப்பம்


## 2006 இல் உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவருக்கு...

யாழ்ப்பாணம் —

க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கு 2006 இல் முதலாம் முறையாகத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும், முதல் முறைதோற்றிப் பின் பாடமாற்றம் செய்யும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பதிவுசெய்தல் வேண்டும்.

இதற்கான கட்டணமாக 575 ரூபாவைச் செலுத்தி பதிவு செய்து, தமக்குரிய பதிவிலக்கத்தைப் பெற்றவர்கள் அந்தப் பதிவிலக்கத்தைக் குறிப்பிட்டு 300 ரூபா காசுக் கட்டளையுடன் பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பித்தல் அவசியமானதாகும்.

மாகாணக் கல்வித் திணைக்களத்துக்குப் பதிவு செய்ய விண்ணப்பித்தவர்கள் இதுவரை பதிவிலக்கத்தைப் பெறாதிருப்பின் 026.2223091 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவிலக்கத்தைப் பெற்று, உடன் பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பிக்குமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## அறிக்கை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது

சாவகச்சேரி —

அண்மையில் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பாதிப்புகள் சம்பந்தமான விரிவான அறிக்கையைத் தயாரித்து வழங்கும்படி தென்மராட்சி பிரதேசகிராம அலுவலர்களைப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கோரியுள்ளார்.

## மாவீரர் தின பதாதைகள்

கொக்குவில் —

குருநகர் மற்றும் புறநகர் பகுதி எங்கும் மாவீரர்தினப் பதாதைகள் கட்டப்பட்டு வருகின்றன.

இதேவேளை சிரமதானம் மூலம் வீதிகள், வகுப்பறைகள் துப்புரவு செய்யும் பணிகளும் நடைபெற்றுவருகின்றது.

மழைநீரை வெளியேற்றும் வடிகால்களை வெட்டிச்சீரமைக்கும் பணிகளும் இளைஞர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.(206)

## மாவீரர் நாள் நவம்பர் 27 - 2005

### தமிழீழ தேசியக் கொடி ஏற்றலுடன் மாவீரர் எழுச்சி நாள் ஆரம்பமாகும்

### மாவீரர் நாள் தொடக்க நிகழ்வுகள்



01. பொதுச்சுடரேற்றல்.
02. தேசியக்கொடி ஏற்றல்.
03. ஈகச்சுடரேற்றல்.(திருவுருவப்படம்)
04. மலர்வணக்கம்.
05. அகவணக்கம்.
06. உறுதியுரை எடுத்தல்
07. நினைவுரை

என்பன வரிசை ஒழுங்கில் மேற்கொள்ளப்படும். ஆரம்ப நிகழ்வுகள் மாவீரர் எழுச்சி நாட்களான மூன்று நாட்களிலும் நடைபெறும்.

**தேசியக்கொடி ஏற்றல்.**

மாவீரர் எழுச்சி நாட்களுக்கான நிகழ்வுகள் நவம்பர் 25 ஆம் நாளன்று காலை 8 மணிக்கு தேசியக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகும்.

மாவீரர் துயிலுமில்லங்களில் 25 ஆம் நாள் காலை 8 மணிக்கு ஏற்றப்படும் தேசியக் கொடி, நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்த பின் இறக்கப்படும். இயக்கப் பணிமனைகள், தளங்களில் முதல் இரண்டு நாட்களிலும் மாலை 6 மணிக்கு கொடி இறக்கப்பட்டு மறுநாள் காலை ஏற்றப்படும். நவம்பர் 27 ஆம் நாள் மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்த பின் இறக்கப்படும்.

பொது நிறுவனங்களிலும் பள்ளிகளிலும் ஒவ்வொரு நாளும் பணி முடிந்த பின் பகல் 12.01 இன் பின்பாகவும், மாலை 6.00 மணிக்கு முன்பாகவும் தேசியக்கொடி இறக்கப்பட்டு மறுநாள் காலையில் ஏற்றப்பட வேண்டும். தேசியக்கொடி ஏற்றுதல், இறக்குதல் தொடர்பான கூடுதலான விளக்கங்கள் தேசியக்கொடிப் பயன்பாட்டு விதிக்கோவை என்னும் நூலில் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழீழ மாவீரர் பணிமனை



# சிநேகிதியே

## (34 ஆம் அத்தியாயம்)

நேற்றிரவு முழுவதும் மழை கொட்டிக் கொண்டிருந்தது. ஒரே சள சளவென்ற சத்தம்! எனக்கு நித்திரையே வரவில்லை. வீட்டுப்பாடங்களை இன்னும் செய்து முடிக்கவில்லை! அக்காவும் அம்மாவும் அடுக்களையில் தட்டைவடை சுட்டுக் கொண்டு இருந்தார்கள். இரவுச் சாப்பாடு தட்டைவடைதான். யாருக்கோ கலியாணமாம்! அதற்கு வந்த ஓடராம்! நேற்றுப் பின்னேரம் ஒருவர் வந்து 500 வடை வேணும் எண்டு சொல்ல, அவர் போன கையேடை சங்கக்கடைக்கு நான் போக வேண்டிவந்தது! அம்மா சொன்ன உழுத்தம் பருப்பை வாங்கிக்கொண்டுவரும் போது... கமலம்மா வீட்டு விறாந்தையில் யாரோ இருந்து கதைச்சுக் கொண்டிருந்தனம்! அவர் எதிர்ப்பக்கம் திரும்பியிருந்ததால் எனக்கு முகம் தெரியவில்லை. ஆனால் வாத்தியருடைய முகம் தெரிஞ்சுது! அதில் ஏதோ. கவலை தெரிஞ்சுது!.. நான் மழைத் தூறத் தொடங்கவே எங்களுடைய குடிசைக்கு ஓடி வந்து விட்டேன்!... அம்மாவிடம் உழுத்தம் பருப்பைக் கொடுத்து விட்டுச் சொன்னேன்!..

'அம்மா!.. வாத்தியார் வீட்டை யாரோ வந்திருக்கினம் அம்மா!...'

அம்மா என்னை நிமிர்ந்து பார்த்து விட்டுச் சொன்னா!

'ஆரெண்டாலும் வரட்டும்! நீ போய்ப் புத்தகத்தை எடுத்துப் படியடா'

அவள் குரலில் இருந்த சிடுசிடுப்பு .. எனக்கு ஆச்சரியமாக இருந்தது!

'இல்லையம்மா! யாரே இரண்டு பிள்ளையளும் வந்திருக்கினம்!'

'வந்திருக்கட்டும்.. உனக்கேன் இப்ப ஊர்த்தொளவாரம்!'

சரி! இனிமேல் அம்மாவோடை ஏதும் கதைச்சால் அடிதான் விழும்! நான் அவள் கூரையிலை செருகி வைச்சிருக்கிற தடியை ஒரு முறை பார்த்தன்! ஒண்டும் பேசாமல் கொட்டிலுக்கு வந்தன்! எனக்குப் படிப்பில் மனம் செல்லவில்லை. ! புத்தகத்தைத் திறந்தேன்!

'எங்கள் குடும்பம்' பாடத்தின் தலைப்பு! எனக்கு எரிச்சல் வந்தது! எந்த மடையன் இந்தப் பாடத்தை எழுதினான்! என்ன பொய்யெலலாம் எழுதி வைச்சிருக்குது. ஒரு அப்பா, ஒரு அம்மா, இரண்டு பிள்ளைகள்! இது தான் குடும்பமாம்... எனக்கு நேற்று நடந்தது நினைவுக்கு வந்தது! பாடம் படிப்பித்த ரீச்சர்!... எல்லாரையும் உங்கடை குடும்பப் படத்தைக் கீறுங்கோ எண்டு சொல்லிப் போட்டு... அவ 'கல்கி' வாசிக்கத் தொடங்கிவிட்டா! எல்லோரும் கீறிக் கொண்டு போய் அவவிடம் காட்ட வேணும்! நான் ஒண்டும் கீறாமல் பேசாமல் இருந்தேன்! நான் முன்வரிசை வாங்கிலில் நடுவில் இருப்பவன்! அதனால் ரீச்சரின்ரை மேசைக்குப் பக்கத்தில்... நான் ரீச்சர் வாசிக்கும் புத்தகத்தைக் கூர்ந்து பார்த்தேன்! அதன் முன்பக்கத்தில் ஒரு படம்! மரத்தில் ஒரு ஏனை கட்டப்பட்டிருந்தது... அதை ஒரு அம்மா ஆட்டிக் கொண்டிருந்தா! அவவின்ரை முகம் வாடிப்போயிருந்தது! ஆனால் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது!

'ஏன் ! இந்த அம்மா! ... அழுகிறாள்!'

என்ரை அம்மாவும் இப்ப அடிக்கடி பின்நேரவடியில் போய் நின்று அழுவதை நான் கண்டிருக்கிறேன்!... என்ரை அம்மா!... ஒருவேளை அப்பாவை... நினைச்சு அழுகிறாவோ!... என்னுள் ஒரு வெறி கிளம்பியது. மளமளவெண்டு வரைதல் கொப்பியில் வரையத் தொடங்கினேன்! முதலில் அம்மா!... பிறகு ஒரு பக்கத்தில் அக்கா!... பிறகு மறுபத்தில் நான்!... இதுதான் சரியான குடும்பம்!... கலர்ப் பென்சிலை எடுத்து கலர் கொடுத்தேன். அம்மாவின் சேலைக்கு என்ன நிறம் குடுக்கலாம்!... ரீச்சரைப் பார்த்தேன்! சிவப்புப் புடைவை கட்டிருந்தா! நான் என்ரை அம்மாவுக்கும் சிவப்புப் புடவை கட்டிவிட்டேன். அக்காவுக்குப் பச்சைப் பாவாடை!.. எனக்கு நீலத்தில் அரைக்களிசான்!.. எனக்குப் படத்தைப் பார்க்க நல்ல திருப்தியாக இருந்தது!...



# சுனாமி - ஒரு கடல் காவியம்

ரீச்சர் கல்கியை மூடி வைத்து விட்டு எங்களுக்குக் கிட்ட எழும்பி வந்தா!... படங்களைப் பார்த்துக் கொண்டே சரி போட்டுக் கொண்டு வந்தா!... அடுத்த என்ரை படத்தைப் பார்க்க வந்தா! நான் எழும்பி நின்றேன்!... ரீச்சர் படத்தைப் பார்த்தா!...

'இதென்ன குடும்பப் படமா!...'

நான் ஒன்றும் பேசவில்லை!...

'ஏனடா அப்பாவைக் கீறவில்லை!?'

'எனக்கு அப்பா இல்லை!... எங்கடை குடும்பத்திலை அப்பிடி ஒரு ஆள் இல்லை!' நான் வெடிச்சுக் கொண்டு பதில் சொன்னேன்!...

ரீச்சர் என்ர முகத்தைப் பார்த்தா! 'பாடத்திலை இருக்கிற அப்பாவைப் போல வரையலாம் தானே!' ரீச்சர் சிரித்துக் கொண்டே சொன்னா!



எனக்குள் ஏதோ எரிமலை கிளம்பியது!

'இல்லாத அப்பாவை ஏன் கீற வேணும்?'

'கழுதை!... என்ன சொல்கிறாய்?'

என்ரை காதைப் பிடிச்சு ரீச்சர் திருக... நான் அவவின்ரை கையை என்ரை கையால் முழுப்பலத்தோடு தள்ளினேன்! ரீச்சர் திகைச்சுப் போனா!...

'எழும்படா!'...

கோபத்தோடு என் கையைப் பிடித்துக் கொண்டு கொப்பியையும் எடுத்துக் கொண்டு வெளியே வர... அதற்குள்... அந்தப் பக்கத்தால் வந்த அதிபரே... எங்கடை வகுப்புள் திடீரென நுழைந்தார்!

'என்ன பிரச்சினை?'...

அவர் ரீச்சரிட்ட கேட்க... அவ நடந்ததைச் சொல்ல... எனக்கு விளங்கி விட்டது!

இண்டைக்கு அதிபரின் பிரம்பு என்னைப் பதம் பார்க்கப் போகுது. நான் என்ரை கோபத்தை அடக்கியிருக்கலாம்!... இனி ஒண்டும் செய்ய ஏலாது!...

'என்ரை அறைக்குப் பிள்ளையையும் கூட்டிக் கொண்டு வாங்கோ!'

அதிபர் சொல்லிவிட்டுப் போய் விட்டார்!... பாடம் முடிய மணி அடித்தது!

'வாடா!... இண்டைக்கு அதிபரிட்டை நல்லா வேண்டப் போறாய்!'

ரீச்சரின் குரலில் வெற்றிக் களிப்பு!... நான் குற்றவாளி போல அவவைப் பின் தொடர்ந்து அதிபரின் அறைக்குள் போனேன்!... உள்ளே யாரோ அம்மாவின் குரல் கேட்டது.!

'ஐயா! என்ரை பிள்ளைக்கு அப்பன் ஆரெண்டு தெரியாது!... அவன் என்னைக் கட்டிப் போட்டு இந்தப் பிள்ளை வயத்திலை இருக்கக்கை என்னை விட்டிட்டுப் போட்டான்!... நான் தான் பிள்ளையைக் கஷ்டப்பட்டு வளர்த்தன்!... அவன் நல்லாப் படிக்கவேண்டும். நீங்கள் இந்தப் பள்ளிக்கூடத்திலை இடம் தந்தால் போதும்!...'

'சரி... சரி! நாளைக்குக் கூட்டிக் கொண்டு வா!... சேர்த்துவிடலாம்!' அந்த அம்மா வெளியே வந்தா!... எனக்கு ரீச்சர் வாசித்த கல்கியின் முகப்புப் படம் நினைவுக்கு வந்தது!... இப்ப அந்த அம்மா ஏன் அழுதா எண்டது விளங்கியது!

'ரீச்சர் உள்ளே வாங்கோ!'

அதிபர் கூப்பிட ரீச்சரும் நானும் அறைக்குள் நுழைந்தோம்! எனக்கு கொஞ்சம் நடுக்கமாக இருந்தது. என் கண்ணில் முதலில் பட்டது... சுவரில் ஆணியில் தொங்கிய அதிபரின் பிரம்புதான்!... அவரும் அதையே பார்த்து விட்டு என்னைக் கேட்டார்!...

'தம்பி உனக்கு அப்பா இல்லையா?'

'உன்ரை அப்பா எங்கை?'

'அவர் எங்கையெண்டு எனக்குத் தெரியாது! அம்மாவைப் பலமுறை கேட்டுக் களைச்சுப் போனன்!...'

எனக்குள் மீண்டும் எரிமலை கிளம்பியது!... இவர் ஏன் தேவையில்லாத கேள்வி எல்லாம் கேட்கிறா!... அம்மா, அப்பா யாரெண்டு சொல்லவில்லை!... இவர் ஏன் கேட்கிறார்! அதிபர் இப்போது ரீச்சருக்குச் சொன்னார்!...

'ரீச்சர்!... கேட்டியளே!... இவனுக்கு தன்னுடைய தகப்பன் யார் எண்டே தெரியாது! பிறகு எப்படி அப்பாவின்ரை படத்தைக் கீறுவான்?'

ரீச்சர் மௌனமாக நின்றா!...

'பிள்ளையின்ரை மனநிலையை விளங்கிற பக்குவம் ஆசிரியருக்கு அவசியம் தேவை!... இவன்ரை மனதில் இருக்கிற கோபத்தை நான் நல்லா விளங்கிக் கொண்டன்!'

'சேர் !... எனக்கு விசயம் தெரியாது..'

'எல்லாத்தையும் அவதானிச்சு அறிய வேண்டும்!... ஆசிரியர் பதவி வெறும் சம்பளத்துக்குரியதல்ல!... எங்கடை பிள்ளையளை அறிவாளிகளாக அன்போடு உருவாக்கிற தெய்வீகமான தொழில்!... இனிமேல் இப்படிப் பிள்ளையளை வதைக்காமல் அன்போடு நடந்து கொள்ளுங்கோ!'

'சரி சேர்!.. என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ!...'

நானும் அழுது கொண்டே சொன்னேன்!...

'சரி!... இனிமேல் இப்படிப்பட்ட குளப்படி செய்யாதை!'

ரீச்சர் என்ரை தலையிலை சொல்லமாக் குட்டியபோது எனக்கு அம்மாவின் நினைவு வந்தது!...

'யாருக்கு வேணும் இந்த அப்பா!... அம்மாவே போதும்!...'

நான் நினத்துக் கொண்டே வகுப்புக்கு வந்தேன்!...

நேற்றிரவு படுக்கும்போது இருந்த தெளிவு...

இப்ப மீண்டும் குழம்பி விட்டேன்!...

ஒவ்வொரு நாளும் காலையில் வாத்தியார் சாமிப்படத்துக்கு வைக்கிறதுக்கு செவ்வரத்தம் பூப்பிடுங்குக் கொண்டு போய்க் குடுக்கிறது என்ரை வேலை!... ஆனால் வாத்தியார் வேற ஒரு பொடியனைப் பிடித்துவிட்டார்!...

எனக்கு அவனில் பொறாமை வந்தது!... என் பார்வையில் அதைக் காட்டினேன்! வாத்தியார் சொன்னார்!...

'தம்பி நீயே கொண்டு போய்ப் பூவை வைச்சுவிடு!...'

என்ன! நான் சாமிக்கு பூவைக்கிறதா!... நான் தயங்கினேன்!...

'என்ன யோசனை!.. இனிமேல் நீதான் சாமியறை வேலைபார்க்க வேணும்!'

என் கோபம் பறந்து விட்டது!... நான் பூக்களைச் சாமிப்படங்களுக்கு வைக்கும் போது... என்னுள் ஏதோ புதிய உற்சாகம் புரண்டது!...

வாய் என்னையறியாமல் சமயப் புத்தகத்தில் மனனம் செய்த 'சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்'... என்ற தேவாரத்தைப் பாடியது!...

என் குரல் கேட்டு அந்தப் பிள்ளையளும் சாமியறைக்குள் வந்தனர்!... நான் பாடுவதையே மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்!...

நான் பக்தி பரவசமாக... பெரியவனாக ஆகிக் கொண்டிருந்தேன்!...

(தொடரும்...)


---

**பெரியார்** மற்றவர்கள் திருப்தியிலும், சந்தோஷத்திலும் நுழைந்துகொண்டு தொட்டதற்கெல்லாம் இது காதலல்ல அது காதலுக்கு விரோதம், அது காம இச்சை, இது மிருக இச்சை, இது விபச்சாரம் என்பன போன்ற அதிகப் பிரசங்கித்தனமான வார்த்தைகளை ஒருவிதப் பொறுப்புமில்லாதவர்கள் எல்லாம் கூறுவதால், அப்படிப்பட்டவர்கள் கூற்றையும் கூறும் காதலையும் சற்றுப் பார்த்துவிடலாம்.

# ஏது கற்பு? ஏது காதல்?

இன்னும் திறந்து வெளிப்படையாய், தைரியமாய், மனித இயற்கையையும், சுதந்திரத்தையும், சுபாவத்தையும், அனுபவத்தையும் கொண்டு பேசுவதானால் இவை எல்லாம் ஒரு மனிதன் தனக்கு விருப்பமான ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுவது போலவும், தனக்குப் பிடித்த கடையில் பொருட்கள் வாங்குவது போலவும் அவனுடைய தனி விருப்பத்தையும், மனோபாவத்தையும், திருப்தியையும், மாத்திரமே சேர்ந்ததென்றும் அவற்றுள் மற்றவர்கள் பிரவேசிப்பது அதிகப்பிரசங்கித்தனமும், அனாவசியமாய் ஆதிக்கம் செலுத்துவது மாகுமென்றும்தான் சொல்ல வேண்டும்.

பகுதி - 02



காதலானது ஒரு ஆணுக்கோ பெண்ணுக்கோ எப்படி உண்டாகிறது? இது தானாகவே உண்டாகிறதா? அல்லது மூன்றாவது மனிதனுடய பிரவேசத்தைக் கொண்டு உண்டாகிறதா? ஒருசமயம் தானாகவே உண்டாவதாகயிருந்தால், எந்த சந்தர்ப்பத்தில் எந்த ஆதாரத்தின் மீது என்பவைகளைக் கவனித்தால் - பெண் ஆணையோ, ஆண் பெண்ணையோ, தானே நேரில் பார்பதாலும் அல்லது தான் மூற்றாவது மனிதர்களால் கேள்விப்படுவதாலும் உருவத்தையோ, நடவடிக்கையையோ யோக்கியத்தையோ வேறுவழியில் பார்க்க, கேட்க நேரிடுவதாலுமேதான் உண்டாகக்கூடுமே தவிர இவை அல்லாமல் வேறு வழியாக என்று சுலபத்தில் சொல்லிவிடமுடியாது.

இப்படியும் கூட ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணிடத்தில் காதல் ஏற்பட்டு, அந்தப் பெண்ணுக்கு அந்த ஆணிடத்தில் காதல் ஏற்படாமல் போனாலும் போகலாம். இப்படியே ஒரு பொண்ணுக்கு ஒரு ஆணிடம் காதல் ஏற்பட்டு அந்த ஆணுக்கு அந்தப் பெண்ணிடம் காதல் ஏற்படாமல் போனாலும் போகலாம்.

எப்படியும் ஒரு மனிதன் ஒரு வஸ்துவைப் பார்த்த மாத்திரத்தில், கேட்ட மாத்திரத்தில், தெரிந்த மாத்திரத்தில் அந்த வஸ்து தனக்கு இருக்க வேண்டும் என்பதாக ஆசைப்படுகிறானோ, ஆவல் கொள்கிறாளோ அது போலத்தான் இந்தக் காதல் என்பதும் ஏற்படுவதாயிருக்கிறதே தவிர, வேறு எந்த வழியாலாவது ஏற்படுகிறதா என்பது நமக்குப் புலப்படவில்லை.

எப்படிப்பட்ட காதலும் ஒரு சுய லட்சியத்தை அதாவது தனது விருப்பத்தை திருப்தியைக் கோரித்தான் ஏற்படுகின்றதே தவிர வேறில்லை என்பதுவும், காதலர்கள் மனோபாவத்தைக் கவனித்தால் விளங்காமல் போகாது.

அதாவது அழகைக் கொண்டோ, பருவத்தைக் கொண்டோ, அறிவைக் கொண்டோ, சொத்தைக் கொர்ண்டோ, கல்வியைக் கொண்டோ, சங்கீதத்தைக் கொண்டோ, சாயலைக் கொண்டோ, பெற்றோர் பெருமையைக் கொண்டோ, தனது போக போக்கியத்துக்குப் பயன்படுவதைக் கொண்டோ அல்லது மற்றும் ஏதோ ஒரு திருப்தியை அல்லது தனக்குத் தேவையான ஒரு காரியத்தையோ, குணத்தையோ கொண்டோ தான் யாரும் எந்தப் பெண்ணிடமும் அல்லது ஆணிடமும் காதல் கொள்ளும்போது இவன் அறிந்தது உண்மையாகவும் இருக்கலாம். அல்லது அங்கு இருப்பதாக அவன் நினைத்துக் காதல் கொண்டு இருந்தாலும் இருக்கலாம். அல்லது வேஷமாத்திரத்தில் காட்டப்பட்ட ஒன்றினால் இருந்தாலும் இருக்கலாம்.

(தொடரும்...)

# குழந்தை வளர்ப்பு - பிறப்பு முதல் பத்து வயது வரை

(11.11.2005 அன்றைய தொடர்ச்சி...)

குழந்தை தூங்கும் அறையின் வெப்பம், சத்தம், நுளம்புக்கடி போன்ற ஏதாவது காரணமாக இருக்கும். குழந்தை சற்றுக் குறைய நேரமே தூங்கினாலும் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.



குழந்தைகள் மூன்று, நான்கு நாட்களுக்கு ஒரு முறை மலங்கழிக்கும். சில நேரங்களில் பச்சையாகவும் மலம் வெளியேறும். இதற்குப் பல காரணங்கள் உண்டு. சில குழந்தைகளுக்கு மலம் வெளியேறும்போது வலி ஏற்படும். அதற்குப் பயந்து மலம் கழிக்காமலே இருந்துவிடும். அவ்வாறு செய்தால், வயிற்றில் மலத்தின் அளவு அதிகரித்து அதிக வலி தோன்றும். இது மலச் சிக்கலாகிவிடும். இந்த நிலை ஏற்பட்டால் டொக்டரின் ஆலோசனையைப் பெற வேண்டும். ஒரு சில நேரம் பச்சை நிறத்தில் வெளியேறினால் பிரச்சினை இல்லை. தொடர்ச்சியாகப் பச்சை நிறத்தில் இருந்தாலோ, வயிற்றிளக்கிச் சென்றாலோ டொக்டரிடம் காட்ட வேண்டும்.

குழந்தைகள் தொலைக்காட்சி பார்ப்பது தவறல்ல. ஆனால் போதியளவு இடைவெளியில் அமர்ந்து பார்க்காவிட்டால், கண்களைப் பாதிக்கும். குழந்தைகளிடம் விளையாட்டு ஆர்வத்தை உருவாக்க வேண்டியது மிக அவசியம். அந்த ஆர்வத்தைக் கெடுத்து தொலைக்காட்சி முன்னாலே உட்கார வைத்து விடுவது சரியல்ல.

இந்தப் பருவத்தில் குழந்தைகள் சிலவற்றிடம் மண் தின்கின்ற பழக்கம் ஏற்பட்டு விடும். உடலில் இரும்புச் சத்துக் குறைவாக இருந்தால் குழந்தை மண்ணைத் தின்னுகின்றது. அந்தச் சத்துக் குறையை ஈடுசெய்யவேண்டும்.

குழந்தைகள் பெரும்பாலும் மருந்து குடிக்க மறுக்கவே செய்யும். அதனால் மருந்து கொடுக்கும்போது அவர்களுடைய கவனத்தை விளையாட்டின் பக்கம் திருப்பிவிட வேண்டும். விளையாட்டுக் காட்டியபடியே கொடுத்து விடலாம். வற்புறுத்தி திணிப்பது சரியல்ல.

குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொம்மைகள் வாங்கிக் கொடுக்கும்போது அவை பளபளப்பாகவும், விலை உயர்ந்ததாகவும் இருந்து எந்தப் பலனும் இல்லை.

குழந்தைகளின் அறிவு வளர்ச்சியைத் தூண்டும் விதத்தில் அது இருக்கவேண்டும். சப்பாத்தி மாவையும் சிறிதளவு பிசைந்து கொடுத்துப் பலவிதமான உருவங்கள் செய்யக் கொடுக்கலாம். பேப்பர்களை மடித்து விமானம், கப்பல் போன்றவைகளை உருவாக்கச் செய்யலாம்.

### 4 முதல் 10 வயது வரை

இந்த வயதில் குழந்தைகளின் மூளை வளர்ச்சியும், கற்பனைத் திறனும் அதிகரிக்கும் அதனால் வீட்டுச் சுவர்களில் இஷ்டத்திற்கும் கோடு போட்டு படம் வரைவார்கள். இது ஊக்குவிக்கப்பட வேண்டிய விடயம்தான். ஆனாலும் வீடு முழுவதும் எல்லாச் சுவர்களிலும் வரைவது வரவேற்கத் தக்கதல்ல. ஏதாவது ஒரு சுவரில் வரையச் சொல்லுங்கள் அல்லது அதற்கென்று கரும்பலகை ஏதாவது ஏற்படுத்திக் கொடுத்துவிடுங்கள்.

பாடசாலைக்குச் செல்ல சில குழந்தைகள் அடம்பிடிக்கும். அப்போது குழந்தைகளை அடிக்காமல், மிரட்டாமல் அவர்களுக்கு ஏன் பள்ளிக்கூடம் பிடிக்கவில்லை என்பதை மனரீதியாக ஆராய வேண்டும். உடன் படிக்கும் குழந்தைகள்



தரும் மனோரீதியான தொல்லை, உடல் ரீதியான தொல்லை, ஆசிரியர்களின் மிரட்டல் அல்லது ஆசிரியர்கள் கொடுக்கும் தண்டனை, பாடங்களைப் புரிந்து கொள்வதில் ஏற்படும் பிரச்சினைகள் போன்ற பல காரணங்களால் குழந்தைக்குப் பள்ளிக்கூடம் பிடிக்காமல் போகலாம்.

இப்போது 5,6 வயதுச் சிறுவர்-சிறுமியர் தினமும் அதிகநேரம் கார்ட்டூன் சேனல்களைப் பார்த்துப் பொழுது போக்குகிறார்கள். அதிக நேரம் அவர்களைத் தொலைக்காட்சி பார்ப்பது கண்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியத்துக்கும் கெடுதல் ஏற்படுத்தும். அதனால் விளையாட்டு, இதர பொழுதுபோக்குகளில் சிறுவர்



களுக்கு ஆரோக்கியத்தை ஏற்படுத்துங்கள். பல பெற்றோர், தங்கள் குழந்தைகள் போதுமான அளவு உணவு உண்பதில்லை என வருத்தப்படுகிறார்கள். தினமும் இட்லியையும், தோசையையும் கொடுத்தால் குழந்தைகளுக்கு வெறுப்பு ஏற்படத்தான் செய்யும். பாடசாலை செல்லும் குழந்தைகள் தினமும் சக மாணவ மாணவிகள் மூலம் விதவிதமான உணவுகளைப் பார்கிறார்கள். அதனால் தங்கள் வீடுகளிலும் நிறத்திலும் சுவையிலும் வித்தியாசமுள்ள உணவுகளை எதிர்பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட உணவுகளைப் கொடுக்கும்போது குழந்தைகள் தாராளமாக உண்ணவே செய்யும்.

இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு படிக்கும்போது சிறுவர் சிறுமிகளிடம் என்ன கலை ஆர்வம் இருக்கிறது என்பது தெரிந்துவிடும். பாடும் ஆற்றலில் இருப்பதாக உணர்ந்தால், அதற்கான பயிற்சிக்கு ஏற்பாடு செய்து கொடுங்கள். அதுபோல பல்வேறு போட்டிகளில் பங்கேற்கும் ஆர்வத்தை உருவாக்கி கொடுங்கள். அவர்கள் விரும்பும் போட்டிகள் தொலைக்காட்சியில் நடப்பதைப் பார்க்க வாய்ப்புக் கொடுங்கள். முக்கியமாக விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க அக்கறை செலுத்தச் செய்யுங்கள்.

சிறுவர் - சிறுமியர்களிடம் பிடிவாதம் இருக்கத்தான் செய்யும். பெற்றோரின் அணுகுமுறையால்தான் பிடிவாதம் கூடவோ, குறையவோ செய்யும். குழந்தை கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்து விடக்கூடாது.

குழந்தைகள் வளர வளர அதன் தேவைகள் வளர்ந்து கொண்டே இருக்கும். அதனால் தேவையான பொருட்களை மட்டும் வாங்கிக் கொடுங்கள். ஒரே குழந்தையை வளர்க்கும் பலரும் நாங்கள் சம்பாதித்து வைத்திருப்பது உனக்குத்தான்.

அதனால் நீ எதைக் கேட்டாலும் வாங்கித் தருவோம் என்ற மனோபாவத்தில் இருக்கிறார்கள். இது தவறான அணுகு முறையாகும். குழந்தைகளின் எதிர் காலத்தையும் பாதிக்கும். ☆☆☆☆

---

## வெண்புள்ளி ஒரு நோய் அல்ல

வெண்புள்ளி ஒருநோய் கிடையாது. இது ஒருபாதிப்பு. தெளிவாக சொல்லவேண்டுமென்றால், இது ஒரு அழகியல் பிரச்சினை அவ்வளவுதான். தோலில் இருக்கும் மெலனின் என்னும் நிறமி நிறமிழப்பதனால் இந்தப் பாதிப்பு உண்டாகிறது. ஆங்கிலத்தில் இந்தப் பாதிப்பை விட்டிலிகோ லூகோடெர்மா என்றும் - தமிழில் மருத்துவர்கள் வெண்புள்ளி, வெண்படலம் என்றும் கூறுவார்கள். என்றாலும் பெரிய மனச் சுமையாகச் தெரிவதில்லை. இந்தப் பாதிப்பை வெண்குஷ்டம் என்று குறிப்பிடும்போதுதான் பாதிப்புற்றவர்கள். தங்களுக்குள் கூனிக் குறுகிப் போகிறார்கள்.

குஷ்டத்துக்கும் லூகோடெர்மாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று பலருக்கும் தெரிவதில்லை. அண்மையில் பிரான்ஸில் நடந்த தோல் மருத்துவ நிபுணர்கள் மாநாட்டில் இது ஒரு நோய் கிடையாது என்று அறிவிக்கப் பட்டுள்ளது.



இது தேமலைவிடப் பாதிப்பு இல்லாதது. யாருக்கும் தொற்றாது. தொட்டால் ஒட்டிக்கொள்ளாது. பரம்பரையாக வராது. இந்தப் பாதிப்பு உள்ளவர்களைத் தாராளமாகத் திருமணம் செய்து கொள்ளலாம். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கு எந்தப் பாதிப்பும் வராது.

உடல் ரீதியாகவும், மருத்துவ ரீதியாகவும் இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. பின்னர் பிரச்சினை எங்கு ஆரம்பமாகிறது? சமூகத்துக்கும், பாதிப்புற்றவர்களுக்குமிடையேதான் பிரச்சினை தலை தூக்குகிறது!

சமூகம் இந்தப் பாதிப்புற்றவர்களைத் தாழ்வு மனப்பான்மை கொள்ளவைக்கின்றது. திருமணம் செய்து கொள்ளத் தடைகள், கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் பிரச்சினைகள் போன்றவை சமூகத்தின் இந்த நோயைப் பற்றிய அறியாமையினால் விளைகின்றன. நல்ல திறன் இருந்தும் கூட இவர்களை நிறுவனங்கள் வேலைக்கு அமர்த்த முன்வர மறுக்கின்றனர்.

இவர்களது மொத்த வாழ்க்கையையும் இந்த வெண்புள்ளிப் பாதிப்பு சிதைப்பதில்லை. இதனைக் காரணம் காட்டி சமூகம் தான் இந்தப் பாதிப்புற்றவர்களைச் சிதைத்துவிடுகிறது. வெண்புள்ளி எதனால் உண்டாகின்றது? என்ற காரணத்தைத் துல்லியமாக எவரும் இதுவரையில் கண்டுபிடிக்கவில்லை. கண்டுபிடிப்பவருக்கு நோபல் பரிசு தருவதாகக்கூட அறிவித்துள்ளனர்.

இது இப்படியிருக்க, வெண்புள்ளியை ஒரு மாதத்தில் குணப்படுத்துகிறோம் என்று மருத்துவர்கள் சிலர் ஏமாற்று பரிகாரம் செய்துவருகிறார்கள்.

---

## 'கோவா' மார்பகப் புற்றுநோய்க்கு அருமருந்து

இன்று அநேகமான பெண்களைத் தாக்கும் ஒரு நோயாக மார்பகப் புற்றுநோய் காணப் படுகிறது. அத்துடன் இன்று பாடசாலைகளுக்குச் செல்லும் சிறுவர்களும், வேலைக்குச் செல்பவர்களும் நேரத்திற்கு உணவை உட்கொள்வதில்லை. 10 வயதிலேயே அல்சர் (குடற் புண்) வாயுத்தொல்லை போன்றநோய்களுக்கு ஆளாகி வருகின்றனர். நேரத்திற்கு,



தகுந்த உணவை உட்கொள்ளாததால் உணவை சமிபாடடையச் செய்யச் சுரக்கும் அமிலங்கள் குடலைத் தாக்குவதால் குடற்புண் (அல்சர்) தோன்றுகிறது. இரப்பையில் வாயுத் தொல்லை ஏற்படுதல் போன்றன நம்மில் பெரும்பாலானோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளாகும்.

மார்பகப் புற்றுநோய், வாயுத் தொல்லை, குடற்புண்கள் போன்ற தொல்லைகளுக்குத் தீர்வாக இப்போது கோவா கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கோவாவில் புற்றுநோய்களுக்கு எதிராகத் தாக்கம் புரியும் ஆற்றலும், ஈஸ்ரஜனின் அளவை எமது உடலில் சம அளவில் பேணும் தன்மையும் உண்டு. இதன் மூலம் மார்பகப் புற்றுநோய் எனும் கொடிய நோயிலிருந்து நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளலாம்.

கோவாவிலிருந்து பெறப்படும் ஜூஸ், சமிபாட்டுத் தொகுதியில் ஏற்படக்கூடிய பிரச்சினை நோய்கள் தொற்றுக்களைத் தீர்க்கக்கூடியது. வைரஸ் பற்றீரியாவுக்கு எதிராகச் செயற்படும் சக்தி இவற்றுக்கு உண்டு. இதில் கார்பென்சிலோன் எனும் ஓர் நோயை எதிர்க்கக்கூடிய அசேதனச் சேர்வை உண்டு. இவ்வாறான நோய்களை உடையவர்கள் பச்சை கோவாவை ஜூஸ் செய்து 1/4 கப் தினமும் அருந்த வேண்டும். இவ்வாறாகத் தொடர்ச்சியாக கிழமைக்கு அருந்தி வந்தால் ஏனைய மருந்துகளால் குணமாகாத இந்நோய்கள் உடனடியாகப் பறந்து விடும் என்கிறார் லக்னோவைச் சேர்ந்த வைத்தியர்.

லக்னோவில் அல்சர் நோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு பன்றிக்குத் தொடர்ந்து இதனைக் கொடுத்து வந்தபோது அந்நோய் குணமாகியது.

இந்தக் கோவா ஜூஸ் வயிற்றில் ஏற்படக்கூடிய புற்று நோய்கள், ஏனைய நோய்களையும் குணப்படுத்தக் கூடியது.

1/3 கப் பச்சைக் கோவா ஜூஸ் அல்லது சமைத்த கோவாவின் 2 மேசைக் கரண்டி தினமும் பருகி வருவது நல்லது. கோவாவின் மேற்புறமாக உள்ள தடித்த தோல், தோல் நோய்களைக் குணப்படுத்தும். கோவா - நோய்களிலிருந்து எம்மைக் காப்பாற்றுவதுடன், முகத்தை அழகுபடுத்துவதாகவும் சீனாவில் செய்த ஆராய்ச்சி ஒன்றில் கண்டு பிடித்துள்ளனர்.

ஆனால், எல்லோருக்கும் கோவா ஜூஸ் ஒத்துவரும் என்பதை வைத்திய நிபுணர்களால் நிரூபிக்க முடியாதுள்ளது. சிலருக்கு வயிற்றோட்டம், தசைகளுக்குள் பிடிப்பு, வீக்கம் என்பனவும் இதனால் ஏற்பட வாய்ப்புண்டு என்கிறார்கள் வைத்தியர்கள்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவி! வழங்குமாறு வேண்டுகோள்

மன்னார்

மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடை மழையால் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. பல பாதைகள் துண்டிக்கப்பட்டுள்ளதுடன், பல கிராமங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

சுமார் 40 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு பாதிப்புற்ற மக்களுக்கு அவசர நிவாரண உதவிகளை வழங்குவதற்கு 57 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்குமாறு மாவட்ட அரச அதிபர்கள் அரசுக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் குளங்களின் உடைப்பைத் தடுப்பதற்காக குளங்களின் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. இதனால் நீர் மட்டம் அதிகரித்து முல்லைத்தீவு - பரந்தன் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. முல்லைத் தீவு - புதுக்குடியிருப்புக்கான போக்குவரத்து பலத்த சிரமத்தின் மத்தியில் நடைபெற்று வருகின்றன.

நெடுங்கேணி - முல்லைத்தீவுக்கான போக்குவரத்து மட்டுமே இடம்பெற்று வருகிறது. இந்தப் போக்குவரத்தும் வெள்ளம் பரவுவதால் துண்டிக்கப்படும் அபாயமுள்ளது. எனவே, மாற்று வாகனப் போக்குவரத்துக்களை ஆரம்பிப்பது குறித்து நிபுணத்துவ ஆலோசனை தேவைப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், வடக்கு - கிழக்கு மாகாண சபை அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டதால், நிவாரண உதவிகளை மேற்கொள்வதிலும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தொண்டர் அமைப்புக்கள் பாதிப்புற்ற மக்களுக்கான அவசர உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை - கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளம் காரணமாக பரந்தன் - பூநகரி போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியில் 10 அடி அகலமும், 20 அடி நீளமும் உடைய வீதி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. இதன் காரணமாக 137 கிலோமீற்றர் சுற்றி கிளிநொச்சிக்குப் பயணம் மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - மன்னார், விடத்தல்தீவு, மன்னார்துறை ஆகிய இடங்களில் கடல் நீர் பெருக்கெடுத்து கிராமத்துக்குள் புகுந்ததால், 500 குடும்பங்கள் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் பொதுஇடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் அரச அதிபர் வி. விஸ்வலிங்கம் தெரிவித்தார்.

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மருந்துகளை இந்தியா வழங்கியது



கிளிநொச்சி

கிளிநொச்சியில் இயங்கும் மாவட்ட வைத்தியசாலைக்கான அத்தியாவசிய உயிர்காக்கும் மருந்துகளை இந்திய அரசு நேற்று முன்தினம் வழங்கியுள்ளது.

சுகாதார அமைச்சு இயக்குநர் எச்.ஏ.பி.கஹடலியனகேவிடம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவ் இதனை வழங்கினார்.

கிளிநொச்சி மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் பற்றாக்குறையாக உள்ள இந்த மருந்துகளை வழங்குவதாக இந்தியத் தூதரகத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த சில நாட்களாகப் பெய்த கனமழையால் கிளிநொச்சி வைத்தியசாலை மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியின்போது வடக்கு - கிழக்கு சுகாதார அபிவிருத்தி ஆலோசகர் வி.ஜெகநாதன், கிளிநொச்சி சுகாதாரத்துறை அதிகாரி டி சத்தியமூர்த்தி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கவிஞர் நாவண்ணனின் 'அக்கினிக்கரங்கள்' இரண்டாம் பதிப்பு நூல் வெளியீட்டு விழா

மன்னார்

கவிஞர் நாவண்ணனின் "அக்கினிக் கரங்கள்" இரண்டாம் பதிப்பு நூல் வெளியீட்டு விழா மன்னாரில் நடைபெறவுள்ளது. இந்த நூல் அறிமுக விழா வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட படுகொலைச் சம்பவத்தை விபரிக்கும் இந்நூலின் தற்போதைய பதிப்பில் மேலும் இரு அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

மன்னாரில் அருட்தந்தை நேசன் இந்திய இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட சம்பவத்தை, அவரது அனுபவங்களை விளக்கும் "அக்கினிக் குண்டத்தில் ஐந்து நாட்கள்" என்னும் விடயமும், யாழ்.சுண்டுக்குழியில் இந்திய இராணுவத்தினரால் திருமதி சிவானந்தராஜா, அவரது மகள் ஆகியோர் சுட்டுக்கொலை செய்யப்பட்டது - வீட்டு வளவினுள்ளேயே அவர்களது சடலங்களை அடக்கம் செய்ய நேர்ந்தமை பற்றிய விடயங்களைவிளக்கும் குறுநாவலான "நிலையம்" என்பனவே இந்நூலில் மேலும் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த நூல் அறிமுகவிழா நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் மன்னார் கத்தோலிக்க தேவாலயத்தில் திருமறைக் கலாமன்றத்தின் மன்னார் கிளைத் தலைவர் பொஸ்கோ தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மன்னார் ஆயர் இராஜப்பு யோசப் ஆண்டகை ஆசியுரை வழங்கினார்.

அடுத்தமாதம் 3 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்திலும் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு -வவுனியா கல்வியியற் கல்லூரி அதிபர் முதல்வர் பேணாட் தலைமையில் நடைபெறும்.

இதில் - ஆசியுரையை சிவநெறிப் புலவர் சி.ஏ. இராமசாமியும், சிறப்புரையை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் நிகழ்த்துவர். தமிழருவி த.சிவகுமாரன் ஆய்வுரையை நிகழ்த்துவார். முதல் பிரதியை க.சிவானந்தராஜன் பெற்றுக்கொள்வார்.

# மழைக்கு மத்தியிலும் மாவீரர் வாரம் முல்லையில் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

புதுக்குடியிருப்பு

மாவீரர் நாளை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டம் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது.

வீதிகள் தோறும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. முக்கிய சந்திகளில் மாவீரர்களின் வீரவரலாற்றைக் கூறும் அலங்கார வளைவுகள் நாட்டப்பட்டுள்ளன.

வீதிகள் துப்புரவு செய்யப்பட்டுள்ளதுடன், பல இடங்களில் சிரமதானப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்புலிகளின் பிரதேசங்களிலும் விசேட ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. மழை வெள்ளத்திலும் மக்கள் மாவீரர் நாள் நிகழ்வுகளில் தீவிர அக்கறை காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வெ)

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**நவம்பர் 25**

1884 : மிஸௌரியிலுள்ள செயின் லூயி என்ற இடத்தில், ஜோன் மேயன் பெர்க் என்பவர் பால்மா தயாரிப்பதற்கான காப்புரிமம் பெற்றர்.

1913 : ஆசிரியர்கள், குறிப்பாக இந்தியர்கள் குடியேறுவதைத் தடுக்க தென் ஆபிரிக்க அரசு இயற்றிய சில சட்டங்களை எதிர்த்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட காந்தி கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து நேட்டாலில் கலவரம் மூண்டது. கலவரத்தை அடக்கப் பொலீஸார் சுட்டதில் இருவர் பலியாகினர். ஏராளமானவர்கள் காயமடைந்தனர்.

1917 : ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஹங்கேரியில் சமாதானப் பேரணி நடத்தினர்.

1920 : உலகில் முதலாவதாக 16 அங்குலப் பீரங்கிகளையும், 38500 தொன் எடையுள்ள 'நகாட்டோ' என்ற மிகப் பெரிய போர்க் கப்பலையும் கட்டி முடித்துள்ளதாக ஜப்பான் அறிவித்தது.

1923 : அமெரிக்காவுக்கும், இங்கிலாந்துக்கும் இடையே கம்பியில்லா ஒலிபரப்பு முதன் முதலாக ஆரம்பமானது.

1934 : துருக்கியர்கள் அனைவரும் குடிப்பெயரைத் தங்கள் பெயருடன் போட்டுக்கொள்ள வேண்டும் என்று அதிபர் முஸ்தபா கேமல் ஆணை பிறப்பித்தார்.

1952 : ஒரே திரையங்கில் நீண்ட நாள்கள் தொடர்ந்து நடந்து சாதனை படைத்த அகதா கிரிஸ்டியனுடைய நாடகமான 'த மௌஸ்ட் ராப்' லண்டன் அம்பாஸிடர் திரையரங்கில் முதன் முதலாக மேடையேறியது.

1958 : மோட்டார் வாகனங்களில் தன்னியக்கப் பொறி உபகரணத்தைக் கண்டுபிடித்த அமெரிக்காவைச் சேர்ந்த சார்ல்ஸ் பிராங்லின் கெப்டரிங் காலமானார்.

1961 : அணுவிசையால் இயங்குவதான முதலாவது விமானம் தாங்கிக் கப்பல் யூ.எஸ்.எஸ்.எண்டர்பிரைஸ்ஸின் வெள்ளோட்டம் இடம் பெற்றது.

1965 : காங்கோவில் ஜெனரல் ஜோஸப் மொபுட்டு தலைமையில் இராணுவப் புரட்சி நடந்தது. ஜனாதிபதி கஸவூபூ பதவியிலிருந்து விலக்கப்பட்டார். மொபுட்டு தன்னையே அதிபராக அறிவித்துக் கொண்டார்.

1966 : ஜோர்தானின் ஹெப்ரான் பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலை ஐ.நா.சபை வன்மையாகக் கண்டித்தது.

1969 : லெபனானில் பலஸ்தீனக் கெரில்லாப் படை வீரர்களுக்கும், லெபனான் படைக்கும் யுத்தம் மூண்டது. இது காரணமாக லெபனானின் இடைக்கால அரசும் கவிழ்ந்தது.

1973 : கிரீசில் இராணுவப் புரட்சி ஏற்பட்டது. ஜனாதிபதி பாப்பாடோபௌலஸ் பதவியிலிருந்து அகற்றப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

1975 : நெதர்லாந்து ஆதிக்கத்திலிருந்து சூரிநாம் விடுதலை பெற்று குடியரசு நாடானது.

1992 : பிலிப்பைன்சிலுள்ள அமெரிக்கத் தளம் மூடப்பட்டது.

☆ : இந்தியாவில் லோக்சபை கூடும்போது, 'ஜனகனமண' என்ற தேசிய கீதமும், முடியும்போது 'வந்தே மாதரம்' என்ற தேசியப் பாடலும் பாடப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

☆ : செக்கோஸ்லோவேகியா என்னும் நாடு 1993 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஒரே நாடாக இருக்காது என்று பிரேக் நகரில் அறிவிக்கப்பட்டது.

தொகுப்பு : — சந்துரு



வன்னிப் பிரதேசத்தில் கனத்த மழை வெள்ளம் காரணமாக தடைப்பட்டுள்ள போக்குவரத்தைச் சீர்செய்ய உதவி செய்யும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்களைப் படத்தில் காணலாம்.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

சூடாக இருக்கும்பொழுது இரும்புக்கு வடிவம் கொடுங்கள். ஓய்வு நேரத்தில் அதை மெருகேற்றலாம்.

-டிரைடன் -

## நமது நோக்கு

### மகிந்தவின் மந்திரி சபையும்; அது மக்களுக்கு சொல்லும் கதையும்...!

தனது கட்சியின் அங்கத்தினர்கள் பெரும்பாலும் அனைவருக்கும் முழு மந்திரி, அரை மந்திரி, கால்மந்திரி, வெறும் மந்திரி, எனப் பதவிகளை வழங்கி, அவர்கள் அனைவரையும் மந்திரி என்ற மந்திரச் சொல்லால் கட்டிவைக்க முயன்றிருக்கிறார் புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள்.

இது ஒன்றும் மகிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட மூளையில் உதித்த தந்திரோபாயமல்ல. ஏற்கனவே ஜே.ஆர். ஜெயவர்த்தன காலத்தில் ஆரம்பித்து, பிரேமதாஸவின் காலத்தில் வளர்ந்து சந்திரிகா அம்மையாரின் காலத்தில் விஸ்தாரம் பெற்ற மூலோபாயம்தான்.

இலங்கையில் நிலவும் கோமாளித்தன அரசியல் ஜனநாயகத்திற்கு இது ஒரு தெளிவான சான்றாகும்.

மிகவும் சின்னஞ்சிறு தீவான இலங்கையில் மொத்தம் அறுபத்தொன்பது பேர் அமைச்சர்களாக அந்தஸ்துடனும், அந்தஸ்த்தில்லாமலும், வெறும் பிரதிகளாகவும், பதவி வகிக்க முண்டியடித்திருக்கிறார்கள் என்றால் இந்த நாட்டு மக்கள் எத்தகைய பதவிப்பதர்களை நாடாளுமன்றத்திற்கு தங்களின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகின்றதல்லவா?

இதுதான் இலங்கையின் ஆட்சித் தலைமையின் மிக மோசமான பலவீனமாகும். நாட்டு மக்களைப் பாதுகாப்பதை விடவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு தனது கட்சியின் உறுப்பினர்கள் கட்சி மாறாமல் கட்டிவைக்க அமைச்சுப் பதவியை வழங்கிப் பாதுகாக்கவேண்டியுள்ளது பரிதாபத்துக்குரிய விடயமே.

இதேவேளை, பிரதமமந்திரிப் பதவிக்கு தானே பொருத்தமானவர் என்று தனக்குத் தானே நற்சாட்சிப் பத்திரம் வழங்கி அந்தப்பதவி தனக்குக் கிடைக்குமென எதிர்பார்த்துக் காத்திருந்த டி.எம்.ஜயரட்ண மூன்று மாதங்களில் தன்னைப் பிரதமராக்குவதாக ஜனாதிபதி அவர்கள் வாக்குறுதி அளித்துள்ளதாக அறிக்கைவேறு விட்டுள்ளார். அப்படியானால், ரத்னசிறி விக்கிரமநாயக்கவை பதவியிலிருந்து விலக்கப்போகின்றாரா ஜனாதிபதி என்ற கேள்வி எழவே செய்கிறது.

இதற்கிடையில் காலியாகியுள்ள கதிர்காமரின் இடத்திற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வரப்போவதாகவும் ஊடகச் செய்தி கூறியுள்ளது.

இது இன்னொரு வகையான கேலிக்கூத்தாகவே இருக்கும்.

பிரதமர் பதவிக்காகக் காத்திருந்த அனுராவிடமிருந்து கைவசமிருந்த பதவியும் பறிபோய் - சுற்றுலாத்துறையில் சும்மா ஒரு மந்திரிப் பதவி கிடைத்திருக்கிறது. பண்டா பரம்பரைக்கு இப்படியொரு அவமானத்தை பௌத்த சிங்கள ஆட்சித் தலைமை வழங்குவதை வரலாறு பார்த்து ரசிக்கிறது என்றால் மிகையில்லை.

இப்போது அமைக்கப்பட்ட அமைச்சரவை தற்காலிகமான, ஒரு கட்டமைப்பேயென்றும் விரைவில் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுமென்றும், அது கூட நிரந்தரமாக இருக்காதெனவும் தென்பகுதி அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது.

பதவிப் பேரத்தில் சாதகமற்ற - எதிர்பார்ப்புக்கு விரோதமான சாத்தியங்களே உருவானதால் வெளியே மௌனம் காத்து நிற்கும் ஜே.வி.பியினரின் அபிலாஷைகளை மகிந்த ராஜபக்ஷ அவ்வளவு சுலபமாக நிராகரித்து ஒதுக்கிவிட முடியாது.

அரசியல் சூறாவளி ஒன்றிற்கான மையமாகவே ஜே.வி.பியினரின் அணுகுமுறை உள்ளதெனலாம்.

தாம் எதிர்பார்த்தது நடக்காததால் ஏமாற்றமடைந்துள்ள மலையகத்தின் - இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆறுமுகன் தொண்டமான் குழுவினரும், ரவூப் ஹக்கீமின் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் குழுவும் தமது அடுத்த கட்ட நகர்வு அல்லது பாய்ச்சலுக்கான உத்திகள் குறித்து ஆலோசிக்கவே தொடங்கியிருப்பர் என்பது தெளிவு.

அடுத்துவரும் வாரங்களில் அதற்கான பேரங்கள் பேசப்படலாம் என்றே கொழும்பின் அரசியல் ஆய்வாளர்களின் கணிப்பு கூறுகிறது.

- இந்த நிலையில் புதிய ஜனாதிபதி முன்னால் உள்ள பிரதான சவால்கள் குறித்து சிந்திக்கவும், முடிவெடுக்கவும் அவருடன் நிபந்தனைகளின் - கோரிக்கைகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் அவருக்கு ஆதரவளித்த ஹெல உறுமயவினர் எந்த வகையில் ஒத்துழைப்பார்கள் என்பது அடுத்த கேள்வியாகவுள்ளது.

ஜே.வி.பியுடனும், ஹெல உறுமயவினருடனும் முரண்பட்டுக்கொண்டு அவரால் எதனையும் செய்ய முடியாத அதே சமயம், அவர்களுடன் முரண்படாமலும் இவரால் எதனையும் சாதிக்கவும் முடியாது என்ற நிலையில் புதிய ஜனாதிபதிக் கதிரை மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு 'கருவேலம் முட்கள்' பரவிய அமர்விடமாகவே இருக்கப்போகிறது என்பதே உண்மையாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## மாவீரர் நாள் நவம்பர் - 27.2005

"மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள், அவர்களது சாவு சாதாரண மரண நிகழ்வு அல்ல: எமது தேச விடுதலையின் ஆன்மீக அறைகூவலாகவே மாவீரர்களது மரணம் நிகழ்கிறது"

- தமிழீழத் தேசியத் தலைவர் -

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# யானை பள்ளத்துக்குள் விழுந்தால் தவளையும் எட்டி உதைக்குமாம்!

"யானை பள்ளத்துள் விழுந்தால் தவளையும் கூட எட்டி உதைக்கும்" என்று தமிழில் ஒரு பழமொழி சொல்வார்கள். மலையக மக்கள் முன்னணியிலிருந்து வெளியேறித் தனி முன்னணி அமைத்த திகாம்பரம், இப்போது விடுத்துள்ள ஓர் அறிக்கையில் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தோற்றுவிட்டாரென்றும், இதனால் அவரைத் தேர்தலில் ஆதரித்த மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் இப்போது மீண்டும் மகிந்தவின் அரசுடன் இணைந்துகொள்ள முயற்சி செய்கிறாரென்றும், இதற்கு இடமளிக்கக் கூடாதென்றும் சொல்லியிருக்கிறார். இதேசமயம் முன்பு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிலிருந்து வெளியேறி இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி அமைத்த டி.சென்னன் விடுத்திருக்கும் அறிக்கையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுடன் எக்காரணம் கொண்டும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை இணைத்துக்கொள்ளக் கூடாதென்று அறிக்கை விடுத்திருக்கிறார் கவனித்தீரா? என்று கேட்டுக்கொண்டே வந்தார் நண்பர் பரமசிவம்.

நீர்தான் சொல்லிவிட்டீரே யானை பள்ளத்துக்குள் விழுந்தால் தவளையும் எட்டி உதைக்கும் என்று. இனியும் இதற்குமேல் விளக்கம் சொல்லவேண்டுமா? என்று கேட்டேன்.

ஜனாதிபதித் தேர்தல் என்றாலென்ன, நாடாளுமன்றத் தேர்தல் என்றாலென்ன, உள்ளூராட்சித் தேர்தல் என்றாலென்ன தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றிக்காகச் சிலர் நேரடியாகவும், வேறுசிலர் மறைமுகமாகவும் கடுமையாக உழைப்பார்கள். தேர்தல் முடிந்தபின் இவர்கள் காணாமல் போய்விடுவார்கள். எங்கோ இருந்தவர்கள் அருகே வந்துவிடுவார்கள் வெற்றி பெற்றவர்கள் மட்டுமல்ல தோற்றபின்னும் கூடச் சமாளிப்பதற்கு வாய்ச்சவடால் வேண்டும். எதற்கும், எங்கேயும், எதிலும் வெற்றிபெறுவதற்கு அறிவும், ஆற்றலும் மட்டும் இருந்தால் போதாது. வாக்குச் சாதுரியமும் அவசியம் என்று சொன்னேன்.

நீர் சொல்வதுசரிதான் என்று கூறிய நண்பர் பரமசிவம், தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்ததும் போர்நிறுத்த உடன்பாட்டை மீள்பரிசீலனை செய்யப் போவதாகவும், அதில் மாற்றங்கள் செய்யப் போவதாகவும் சொல்லிவந்த மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதும், போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து செயற்படுமென்று பேசியிருக்கிறார். இவரது இந்தக் கருத்தைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மட்டுமல்ல பொது அமைப்புகள் பலவும் வரவேற்றிருக்கின்றன. ஆயிரக்கணக்கான வாக்குறுதிகளைத் தேர்தல் பிரசார காலத்தில் அள்ளிக்கொட்டிய மகிந்தவால் அவற்றை நிறைவேற்ற முடியுமா? இதற்கெல்லாம் எப்படிப் பதில் சொல்லப்போகிறார். இதற்குத் தமது வாக்குச் சாதுரியத்தைத்தானே ஜனாதிபதி மகிந்த நம்பியிருக்கவேண்டும். என்று பரமசிவம் சொன்னார்.

அதுசரி புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுத் தமது கடமைகளைச் செய்யத் தொடங்குவதற்கு முன்னரே மழை வெள்ளத்தினால் பெருகியிருக்கும் புதிய அகதிகள் பிரச்சினைகளைச் சமாளிக்கவேண்டியிருக்கிறதே என்று சொன்னேன்.

அரசியல்வாதியாக அனுபவம் பெற்றவர் அவர். கொழும்புப் பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று பார்த்து, ஆறுதல் சொல்லி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளிக்கும் படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தாரே கவனிக்கவில்லையா? உடனடியாகவே வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு வருவாரென்று எதிர்பார்க்கமுடியுமா? என்று பரமசிவம் கேட்டார்.

ஜனாதிபதியோ, பிரதமரோ வந்து வடக்கு - கிழக்கில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட வேண்டுமென்றோ, நிவாரணம் வழங்க வேண்டுமென்றோ நான் சொல்லவில்லை. கடற்கோளினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயக மக்களுக்கு இன்னமும்தான் வெளிநாடுகள் கொடுத்ததைக் கூடக் கொடுக்க முடியாமலிருக்கும்போது புதிதாக உதவி அளித்துவிடுவார்களாக்கும்! அரசாங்கமோ, வேறு யாரோ தமிழர் தாயகத்தில் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டதும், உதவிக்கு வருவதற்கு முன் ஓடிச்சென்று உதவியளிப்பதற்கு தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகளும், அவர்களுடன் இணைந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகமும்தான் இருக்கின்றனவே! கடற்கோள் ஏற்பட்ட சமயத்திலும் தலைவர் பிரபாகரன் கட்டளைப்படி விடுதலைப் போராளிகள் வடக்கிலும் - கிழக்கிலும் இன, மத பேதமின்றிப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக ஓடிச்சென்று உதவியளித்தனர். இப்பொழுதும் மழையினாலும், வெள்ளத்தினாலும் இருப்பிடங்களை இழந்து அந்தரித்த மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து - உணவு, உடை கொடுத்துப் பராமரிப்பவர்கள் புனர்வாழ்வுக் கழகத்தினரும், விடுதலைப் போராளிகளுமே என்று சொன்னேன்.

இதுமட்டுமா மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகச் சென்று உதவியளித்து வரும் அதேசமயம், மாவீரர்தினக் கொண்டாட்டத்துக்காக மழை வெள்ளத்துடன் ஆனையிறவிலும், ஏ - 9 பாதைகளிலும் செய்திருக்கிற ஏற்பாடுகளை என்னவென்று சொல்வது. பிரமிப்பாக இருக்கிறது. விடுதலைப் புலிகள் சாமானியமானவர்களல்லர். அவர்கள் எதிலும் அசுர சாதனையாளர்கள்தான். அதை மறுக்க முடியாது என்று சொல்லிக்கொண்டு நடந்தார் பரமசிவம்.

# மழை வெள்ளம் காரணமாக இன்னல்களுக்கு முகம் கொடுக்கும் இடைத்தங்கல் முகாம் மக்கள்...

கடந்த வாரம் பெய்த கடும் மழை காரணமாக வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள குடாரப்பு, மருதங்கேணி, வத்திராயன் கிராமங்களில் உள்ள 700 இடைத்தங்கல் முகாம்களிலுள்ளும், முகாமை அண்டிய பகுதிகளிலும் மழை நீர் புகுந்தமையால் - சுமார் 250 வரையான இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த மக்கள் அயலிலுள்ள வீடுகளிலும், மேட்டு நிலப் பகுதிகளிலும் குடிசைகள் அமைத்து தறகாலிகமாகத் தங்கியிருந்தனர். நீர் தேங்கியுள்ள முகாம் பகுதிகளில் மண்கொட்டிலிலும் அதன் மேலே மழை நீர் தேங்கி நின்றது. கிடுகினால் வேயப்பட்ட எஞ்சிய முகாம்களும் நீர் ஒழுக்கினால் தரை முற்றாக ஈரமாகியதுடன் நிலத்தடி நீர் ஊற்றின் மூலம் நிலம் ஈரமாகியுளளமையால், எஞ்சியுள்ள முகாமகளிலும் மக்கள் குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனுடன் தொடர்புடைய அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டும், இவர்கள் தங்குவதற்கு எந்தவொரு மாற்று வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. புனர்வாழ்வுக் கழகம் மட்டுமே இடம் பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவு வழங்கியுள்ளது.

இவைகளை விட நீர், சுகாதாரப் பிரச்சினை வேறு பிரச்சினையாகவுள்ளது. மலசலகூடம், குடிநீர்க் கிணறுகள் இடைத்தங்கல் முகாம்களுக்கு மிக அண்மையாக அமைக்கப்பட்டுள்ளன. மலசல கூடங்கள் உடைந்த நிலையிலும், மழை நீர் தேங்கிய நிலையில் அவையும் நிரம்பி வழிந்து வெளியில் வரும் நிலையில் உள்ளது. இந்தக் கழிவுகள் வெளியேறி கிணற்று நீர், முகாம்களைச் சுற்றியுள்ள மழை நீருடன் கலக்கும் போது குறுகிய நிலப்பரப்புக்குள் வாழ்கின்ற குழந்தைகள் உட்பட பல நூற்றுக் கணக்கான மக்களின் நிலை மிகமோசமானதாக மாறிவிடக் கூடிய நிலை ஏற்படும்.

கடந்த வாரம் தொடர்ந்து பெய்த பெருமழை கடந்த 4 நாட்களாக ஓய்ந்திருந்தது கண்டு முகாம்களில் தங்கியிருந்த மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். அந்த நிம்மதிப் பெருமூச்சு நீண்ட நாட்களுக்கு நிலைத்திருக்கவில்லை. கடந்த சனிக்கிழமை ஆரம்பித்த கடும் காற்றுடன் கூடிய பெருமழை தொடர்ந்து பெய்து கொண்டிருக்கிறது.

**இடைத்தங்கல் குடியிருப்பும் முகாம்களின் எண்ணிக்கையும்**

| | |
|---|---|
| 1.மாமுனை, குடாரப்பு | 120 |
| 2.செம்பியன்பற்று வடக்கு | 120 |
| 3.தாளையடி | 80 |
| 4.மருதங்கேணி | 125 |
| 5.வத்திராயன், வாரிவட்டன் | 120 |
| 6.வத்திராயன் அரசடி | 135 |
| 7.9ஆம் வட்டாரம் உடுத்துறை | 205 |
| 8.10ஆம் வட்டாரம் உடுத்துறை | 130 |
| 9.கொக்குளாய் உடுத்துறை | 83 |
| 10.கொக்குளாய் வீதி ஆழியவளை | 145 |
| 11.பாடசாலை வீதி ஆழியவளை | 164 |
| 12.இடைக்காடு, வெற்றிலைக்கேணி | 107 |
| 13.விநாயகர்புரம் வெற்றிலைக்கேணி | 85 |
| 14.கட்டைக்காடு பகுதி I | 115 |
| 15.கட்டைக்காடு பகுதி II | 114 |
| 16.கேவில் | 30 |

கடந்த காலங்களில் இராணுவத்தினரால் ஆங்காங்கு போடப்பட்டிருந்த மண் அணைகள், சகல கிராமங்களிலும் இடைத்தங்கல் முகாம்கள், நிரந்தர வீடுகள் அமைப பதற்கென நிலங்கள் சமதரையாக்கப்பட்டமை ஆகிய காரணங்களால் தேங்கும் மழை நீர் பெருங்கடலுக்கும், வீரக்களி ஆறு, தொண்டமானாறு நீர் ஏரி ஆகியவற்றுக்கு செல்லும் வாய்க்கால்கள் மூடப்பட்டமை, முகாம்களை அண்டிய பகுதிகளில் சிறிய வீதிகள் அமைகக்கப்பட்டமை ஆகிய காரணங்களாலேயே மழை நீர் அவ்வப்பகுதிகளில் தேங்கி நிற்கிறது. பெருங்கடலுக்கோ, ஆற்றுக்கோ, மழைநீரைப பாய்ச்சுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், முகாம் பகுதிகளிலுள்ள மழை நீரை வெளியேற்ற முடியும். இதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இது தவிர தொண்டமானாறு கடல் நீர் ஏரி, வீரக்களி ஆறு, ஆனையிறவு கடல் நீர் ஏரி ஆகியவற்றில் தேங்கியுள்ள மழை நீர் தொண்டமானாறு முகத்துவாரம், சுண்டிக்குளம், நல்ல தண்ணீர் தொடுவாய் முகத்துவாரங்கள் மூலமே பெருங்கடலுக்குச் செல்கிறது. அப்படிச் செல்லாமல் மழை நீர் தங்கி நிற்குமாயிருந்தால் - வடமராட்சி கிழக்குப் பிரதேசம், பச்சிலைப்பள்ளி வடக்குப் பிரதேசம், தென்மராட்சி கிழக்குப் பிரதேசம், மற்றும் இயக்கச்சி கோவில வயல், மாசார், சோரன் பற்றுப் பகுதிகளிலுள்ள நிரந்தரக் குடியிருப்புகளிலுள்ள மக்களும் இடம்பெயரும் நிலை ஏற்படலாம்.

தற்போது தொடர்ந்து பெய்து வரும் பெருமழை, கடும் காற்றுக் காரணமாக இந்தப் பிரதேசத்தில் உள்ள 16 இடைத்தங்கல் குடியிருப்புகளில் 1878 இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்கள் முற்றாக இடம்பெயர்ந்துள்ளனர். அண்மையில் உள்ள பாடசாலைகள், ஆலயங்கள், பொதுமண்டபங்களிலும் மழை நீர் தேங்கியிருப்பதால் இடம் பெயர்ந்த மக்களை தங்க வைப்பதில் பல்வேறு கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன. இவர்கள் தங்களுக்குரிய உணவுகளைச் சமைப்பதற்கு நிலம் ஈரமாகியுள்ளமை, விறகுத் தட்டுப்பாடு, என்பன பெரும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளன.

தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக இந்தப் பிரதேசத்திலுள்ள சகல வீதிகளும் மழை நீரினால் மூடப்பட்டுள்ளன. சில இடங்களில் 4-5 அடி வரை மழை நீர் தேங்கியுள்ளமையால் போக்குவரத்துச் சேவைகள் தாளையடியிலிருந்து நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. வீதிகளில் நீர் தேங்கி போக்குவரத்து தடைப்பட்டுள்ளமையால், கிழக்கெல்லைக் கிராமங்களான சுண்டிக்குளம், கேவில், போக்கறப்பு, நித்தியவெட்டை, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிக் கிராமங்களுக்கான சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் ஒவ்வொரு வாரமும் கட்டைக்காடு, கேவில் கிராமங்களில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க நடமாடும் வைத்திய சேவையால் நடாத்தப்படும் வைத்திய சேவையும் நடைபெறவில்லை.

வீதிகளில் நீர் தேங்கி நிற்பதால் முகாம்கள், குடியிருப்புகளுக்கு நீர் விநியோகம் செய்யும் தண்ணீர் பௌசர்கள் செல்ல முடியாததால் குடி நீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மருதங்கேணி கிராமிய வைத்திய சாலைக்கு குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், நோயாளர்கள் வெகுசிரமங்களுக்கு மத்தியில் நடந்து வந்தே சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் களஞ்சியத்திலிருந்து கிளைகளுக்கு நுகர்ச்சிப் பொருட்கள் கொண்டு செல்ல முடியாமையால், பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் தனியார் கடைகளில் கூடுதல் விலை கொடுத்து பொருட்கள் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பத்து வருட கால இடப்பெயர்வு அகதி வாழ்க்கை, அதன் பின் மீளக் குடியமர்ந்த மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டு வசதிகளற்ற இடைத்தங்கல் முகாம்களில் பல்வேறு தாக்கங்களுடன் தங்கியுள்ள மக்களுக்கு - தொடர்ந்து பெய்து வரும் பெருமழை மேலும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. எனவே தான் உரியவர்கள விரைவாக உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டியுள்ளது.

மழை கால ஆரம்பமே இந்த நிலை என்றால்? வருகின்ற மாதங்களே கூடிய மழைக்காலங்களாகும். இந்தக் காலங்களில் அனைத்து மக்களுமே பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமுண்டு. இந்த நிலையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாது விட்டால் - இடம் பெயர்வு, சுனாமியால் பாதிக்கப்பட்டு அனைத்தையும் இழந்து பெரும் இடர்களுக்கு மத்தியில் இடைத்தங்கல் முகாம்களில் வாழ்ந்து வரும் மக்கள், பெரும் இடர்களுக்கு முகம் கொடுக்கப் போகிறார்கள் என்பது வேதனை தரும் விடயமாகவுள்ளது.

**கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ்**

# இந்தவார கிரகபலன் 25.11.2005 - 01.12.2005

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ் | | |
| யுரே | 25 இ.12 - 56 கன் - சந் | | சனி |
| நெப் | 28 ப. 11 - 12 துல - சந்<br>30 மா. 5 - 54 விரு - சந் | | சந் |
| சுக் | சூ<br>புத | குரு | கேது |

## மேடம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை1)



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப நிலை சுமூகமாக இருந்தாலும், இடையிடையே சிறு கஷ்டங்கள் தோன்றும். தொடங்குங் கருமங்கள் இழுபாட்டின் மேல் கைகூடும். பிள்ளைகளால் உதவி குறைவாக இருக்கும். தேகசுகமும் இடையிடையே சிறிது பாதிக்கப்படும். பொதுவாக மன நிம்மதி குறைவாகவே காட்டும். விவாகம் முதலிய கருமங்கள் தாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் செல்வாக்கு மந்தமாக இருக்கும். பணிகளைச் சரிவரச் செய்ய முடியாமலிருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலையைக் காட்டும். எப்படி முயன்றாலும் நிதிப் பற்றாக்குறையாக இருக்கும். தொழிலாளர்களுக்கு உற்சாகம் குறைவாகக் காட்டும். உடலில் சேர்வு ஏற்படும். மாணவர்களுக்கு முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டு.

## இடபம்

(கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2)



இடபராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் தொல்லைகள் அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். பிரயாணங்களில் அலைச்சல் காட்டும். எடுத்த கருமங்களில் இழுபறி நிலை ஏற்படும். தேகாரோக்கியம் இடையிடையே பாதிப்படையும். மங்கள கருமங்கள் இழுபறி நிலையைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு மதிகமாகும். சக ஊழியரின் உதவி குறையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் விருத்தியிராது. முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். தொழிலாளர்களுக்கு ஒற்றுமை பாதிக்கப்படும். தொழில் விருத்தியிராது மாணவர்களுக்கு கல்வி ஊக்கம் குறையும்.

## மிதுனம்


(மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மன நிம்மதி குறைவாகவே இருக்கும். பணவருவாய்க்கு ஏற்ப செலவுகளும் சரிசமமாகக் காட்டும். பிரயாண வசதிகள் குறையும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவேறும். மங்கள கருமங்கள் தாமதத்தைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பொறுப்புகள் அதிகமாகும். அதிகாரிகளுக்கு ஏற்ப நடந்துகொள்ளவேண்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். விற்பனைகளில் லாபம் குறையும். புதிய முதலீடுகளை ஆலோசித்துச் செய்வது நன்று. தொழிலாளர்களுக்கு ஒப்பந்தங்கள் உரிய காலத்தில் நிறைவேறாது தாமதமாகும். மாணவர்களுக்கு ஊக்கத்துக்கேற்ப பலாபலன் கிடைக்கும்.

## கடகம்

( புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)



கடகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டு. சுப கருமக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவேண்டியிருக்கும். பணவருவாய் திருப்திகரமாக அமையும். வெளிநாட்டிலிருந்து நற்செய்திகள் கிட்டும். எடுத்த கருமங்கள் திருப்திகரமாக நிறைவேறும். மங்கள கருமங்கள் மிக விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு நினைத்த கருமங்கள் அவ்வாறே கைகூடும். விரும்பிய வேலைப்பொறுப்புக்கள் கிட்டும். அதிகாரிகள்ஒத்துழைப்பு நல்குவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். முதலீடுகள் விற்பனையாகும். புதிய தொழில் தொடங்க நன்று தொழிலாளர்களுக்கு தொடங்கிய தொழில்கள் இனிதாக நிறைவேறும். வருவாய் சிறக்கும். மாணவர்களுக்கு நன்று. உயர்கல்வி கற்க வாய்ப்புகள் உண்டு.

## சிங்கம்

( மகம்,பூரம், உத்தரம்1 ஆம் கால்)



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு மிகச் சிறப்பான வாரம். குடும்பநிலை சிறப்பாக மகிழ்ச்சியுடன் விளங்கும். பண வருவாய் அதிகரிக்கும். புத்திரர்களால் உதவிகள் கிட்டும். வீட்டில் சுப நிகழ்வுக் கொண்டாட்டங்கள் நிகழும். உறவினர் களின் வருகையால் வீடு கலகலப்பாக மிளிரும். எடுத்த கருமங்கள் மனம் போல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு அதிகமாகும். பதவி உயர்வுகள், வேதன உயர்வுகள் தேடிவரும். வர்த்தகர்களுக்கு ஏற்றுமதி இறக்குமதி முதலியவற்றால் கொள்ளை லாபம் கிட்டும். வியாபாரம் பிரமாதமாக இருக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் ஒப்பந்தங்கள் விரும்பிய வண்ணம் கைச்சாத்தாகும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் சித்திகள், பாராட்டுக்கள் கிட்டும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் சித்திக்கும்.

## கன்னி


(உத்தரம் 2,3,4கால்கள் அத்தம், சித்திரை1,2)



கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நிம்மதி குறையும். புத்திரர்களால் தொல்லைகள் ஏற்படும். வருவாயிலும் பார்க்கச் செலவு கூடுதலாக இருக்கும். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நன்று. பிரயாணங்களில் அலைச்சல் காட்டும். எடுத்த கருமங்கள் நிறைவேறாது. உறவினர்களுடன் கருத்து வேற்றுமை தோன்றும். மங்கள கருமங்கள் காலவரையறையின்றி இழுபறி நிலை காட்டும். உத்தியோகத்தர்களுக்கு கருமங்களில் தடை, பொருட்செலவு காட்டும். வேலைப்பளு அதிகமாகும். சக உதவியாளர்களின் உதவி கிடையாது. வர்த்தகர்களுக்கு வியாபாரம் நட்டத்திலேயே நடக்கும். பழைய கடன்களை வசூலிக்க முடியாமலிருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். தொழிலாளர்களுக்கு மனவலிமை உற்சாகம் குன்றும். வருவாய் குறையும். மாணவர்களுக்கு விளையாட்டுக்களில் அதிக நாட்டம் தென்படும்.

## துலாம்

(சித்திரை 3,4 சுவாதி, விசாகம், 1,2,3)



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தம்பதிகளிடையே அந்நியோன்யம் சிறப்படையும். புத்திரர்களால் மகிழ்ச்சி பெருகும். வீட்டில் நற்கருமக் கொண்டாட்டங்கள் நிகழும். பணவருவாய் சிறப்படையும். தொடங்குங் கருமங்கள் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு நீண்டகால அபிலாஷைகள் நிவர்த்தியாகும். சிலருக்கு நிர்வாகப் பொறுப்பு கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். திருமணத்தை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு கருமம் கைகூடும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வங்கிநிலை திருப்திகரமாக இருக்கும். புதிய முதலீடுகளைச் செய்யலாம். தொழிலாளர்களுக்குப் பல உதவிகள் கிட்டும். வருவாய் பெருகும். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சியடையும். விஞ்ஞான மாணவர்கள் கூடிய பலன் பெறுவர்.

## விருச்சிகம்

(விசாகம் 4, அனுஷம், கேட்டை)



விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பநிலை சந்தோஷமாக இருப்பினும். இடையிடையே சஞ்சலங்களும் தோன்றும். பணவருவாய் இருப்பினும். செலவுகளுக்கும் குறைவிருக்காது. பிரயாண வசதிகள் குறையும். உறவினர்களிடையே வேற்றுமைகள் தோன்றக் கூடும். தொடங்கும் கருமங்கள் இழுபறியின் மேல் கைகூடும். விவாக சுப கருமங்கள் தாமதத்தைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமானாலும் சக உதவியுடன் சமாளிக்க முடியும். அதிகாரிகள் கடுமையாக நடந்துகொள்வர். வர்த்தகர்களுக்கு முயற்சிக்கேற்ப வியாபாரம் நடக்கும். கடன் வியாபாரத்தைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளர்கள் தொடங்கிய தொழில்களை நிறைவேற்ற முடியாமலிருப்பர். மாணவர்கள் ஊக்க மெடுத்தால் மட்டுமே முன்னேறுவர்.

## தனுசு

( மூலம், பூராடம், உத்தராடம்)



தனுசு ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். புத்திரர்களிடமிருந்து நற்செய்தி கிடைக்கும். வருமானம் திருப்தியாக இருக்கும். தொடங்கும் கருமங்கள் இனிதாக முடியும். தேகாரோக்கியம் நன்றாக இருக்கும். உறவினர்களிடையே கொண்டாட்டம் வலுக்கும். திருமணத்தை எதிர்நோக்கியிருப்போருக்கு கருமம் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு சக ஊழியர்களுடன் நட்புவளரும். அதிகாரிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். எதிர்பார்த்த லாபம் கிட்டும். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்கு விரும்பியவாறு தொழில் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும்.

## மகரம்

( உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2)



மகரராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சர்ச்சைகள் ஏற்பட வண்ணமிருக்கும். புத்திரர்கள் தொல்லை தருவார்கள். வருவாயிலும் பார்க்க செலவு அதிகமாகும். பிரயாணங்களால் அலைச்சல் ஏற்படும். தொடங்கிய கருமம் நிறைவேறுவது கஷ்டம். எதிர்பார்த்திருந்த திருமணம் காலம் தள்ளிப்போகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகள் அதிகமாகும். அதிகாரிகள் கடினமாக நடந்துகொள்வர். வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் இலாபம் கிடையாது. வாடிக்கையாளர்களின் வரவு குறையும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். தொழிலாளர்களுக்கு ஒப்பந்தங்கள் தாமதமாகும். வருவாயும் குறையும். மாணவர்களுக்கு ஊக்கம் குறையும். நண்பர்களுடன் மனஸ்தாபங்கள் எற்படலாம்.

## கும்பம்


(அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3)



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உறவினர்களின் வரவு கூடுதலாக இருக்கும். அவர்களால் உதவி கிட்டும். புத்திரர்களால் மகிழ்ச்சி கிட்டும். வெளிநாடுகளிலிருந்து உதவிகள் வந்து சேரும். தேகசுகம் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணத்தை எதிர்நோக்கி இருப்போருக்கு கருமம் கைகூட வாய்ப்புகள் கிட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு குறையும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். விரும்பிய இடமாற்றங்கள் கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் கூடுதலான லாபத்தைத் தரும். வங்கி உதவிகளும் உண்டு. வாடிக்கையாளர்களின் வரவு கூடுதலாகும். தொழிலாளர்களுக்கு புதிய தொழில் ஒப்பந்தங்கள் கிடைக்கும். வருமானம் பெருகும். மாணவர்களுக்கு கல்விமுன்னேற்றம் நன்று. உயர்கல்வி கற்க வாய்ப்புகள் உண்டு.



## மீனம்



(பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)



மீனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். புத்திரர்களால் சுகமும் மகிழ்ச்சியும் கிடைக்கும். பணவருவாய் சிறப்பாக இருக்கும். திட்டமிட்ட கருமங்கள் நிறைவேறும். தூரதேச உறவுகள் வலுவடையும். குடும்பப் பெண்கள் ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவர். திருமணத்தை எதிர்பார்ப் போருக்கு ஆர்வம் காட்டுவர். திருமணத்தை எதிர்பார்ப்போருக்கு கருமம் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு இருக்கும். வேலைப்பளு குறையும். விரும்பிய வேலை மாற்றங்கள் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் பிரமாதமாக இருக்கும். நல்ல லாபம் கிடைக்கும். வாடிக்கையாளர் கூடுதலாக வருவர். தொழிலாளர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்புக் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் முன் னணி வகிப்பர். சிலருக்கு வெளிநாடு செல்ல வாய்ப்புண்டு.

# ஆனையிறவு மாவீரர் நினைவாலய திறப்பு நிகழ்விலிருந்து...












நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் மாவீரர் நினைவுத்தூபி திறந்து வைப்பு!






யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவுத்தூபியை நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் திரை நீக்கம் செய்து வைத்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவ ஒன்றியத் தலைவர் விஜயரூபன் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், வணிக முகாமைத்துவ பீடாதிபதி தேவராஜா, மருத்துவப் பீடாதிபதி டொக்டர் சிவபாலன், விவசாய பீடதிபதி இராசதுரை ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை பல்கலைக்கழக மாணவ ஒன்றிய முன்னாள் செயலாளர் சிவகரன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர் நினைவுத்தூபியை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் திரைநீக்கம் செய்துவைத்தார்.

மாவீரர் நினைவுத்தூபிக்கு மலர் மாலையை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவரும், மாவீரரின் சகோதரருமாகிய செல்வக்குமார் அணிவித்தார். தொடர்ந்து மாவீரர் நினைவுத்தூபிக்கு துணைவேந்தர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்தினர்.

அடுத்து நினைவுரைகளை பேராசிரியர் கந்தசாமி, ஆசிரிய சங்கத் தலைவர் பேராசிரியர் சிவானந்தமூர்த்தி, ஊழியர் சங்கத் தலைவர் தங்கராஜா, துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

## காலநிலை அவதானிப்பு நிலையம் கிளிநொச்சியில் நாளை திறப்பு!

கிளிநொச்சி —

தமிழீழ காலநிலை அவதானிப்பு நிலையம் நாளை முதல் இயங்கவுள்ளது.

கிளிநொச்சி பாரதிபுரத்தில் அறிவியல் நகர், 7 ஆம் வீதியில் இந்த அவதானிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது.

அவதானிப்பு நிலையத்தின் திறப்பு விழா நாளை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அகவணக்கம், பெயர்ப்பலகை திரைநீக்கம், கட்டடம் திறந்துவைத்தல், அலுவலக அறை திறந்துவைத்தல், கட்டுப்பாட்டறை திறந்துவைத்தல், கணினி தொடங்கி வைத்தல், வரவேற்புரை, வாழ்த்துரை, சிறப்புரை ஆகியன இந்த நிகழ்வில் இடம்பெறும்.

## தமிழினத்தை, தமிழ்...

விட்ட இனமாக, இன்னொரு நாட்டின் உதவியற்ற இனமாக தமிழினம் தனது விடுதலைக்கு தானாகவே போராட வேண்டிய வரலாற்று நிலையில், அந்த விடுதலை விட்டுக் கொடுக்கப்படாமல் தலை நிமிர்ந்து நிற்கும் எழுச்சி நிலைக்கு மாவீரர்களே காரணம்.

நாம் உதவிகளற்ற நிலையை மாவீரர்களின் உயிரை விலையாகக் கொடுத்தே ஈடுசெய்துள்ளோம். ஆனையிறவை வெற்றிகொள்ளும் ஆரம்பத்தில் 600 மாவீரர்களை வித்தாக விட்டிருந்தோம்.

அந்த மாவீரர்களின் பெறுமதி இன்று ஆனையிறவு வெற்றிகொள்ளப்பட்டதனால் உண்மையான அர்த்தம் செறிந்ததாக மாறியிருக்கின்றது. இது போன்றே எமது விடுதலைக்காக இதுவரை கொடுத்துள்ள இந்த விலை உண்மையானதாவதற்கு தமிழினம் விடுதலைபெறுவது அவசியம்.

தமிழின விடுதலையின்போது இந்த மாவீரர்களின் அர்ப்பணம் உண்மையானதாக, பெறுமதியானதாக மாறும்.

நாம் பலமற்றவர்களானால் எமது வரலாற்றை எதிரிகள், துரோகிகள் எழுதினால் இந்த மாவீரர்களின் அர்ப்பணிப்பு பெறுமதியற்றதாகிப் போகும்.

பல்லாயிரக்கணக்கான இந்திய இராணுவத்தால் முற்றுகைக்குள்ளான நேரத்தில் தலைவர் உறுதியான முடிவை எடுத்தார். விலையாகக் கொடுக்கப்பட்ட உயிர்கள் தமிழீழ வரலாற்றில் பதிந்து வைக்கப்பட வேண்டும் என்று விரும்பினார்.

தலைவரின் தனிப்பட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்குள்ளாக்கப்பட்ட போதிலும் - மாவீரர் நாள் பற்றிய கனவைக் கண்டார். விடுதலைக்காகக் கொடுக்கப்பட்ட விலைகள், உயிர்கள் தமிழீழ மக்களின் வரலாற்றில் பதிந்து வைக்கப்பட வேண்டும் என்று விரும்பினார். மாவீரர் நாள் என்ற பெயரை தேர்வு செய்தார்.

இன்று உலகப் பரப்பெங்கும் மாவீரர்கள் நினைவுகூரப்படுகிறார்கள் என்றால், எல்லாத் தமிழர்களும் விடுதலையின்பால் ஒன்றுபட்டு சிந்திக்கிறார்கள் என்றால், அது தமிழினம் இன்று பலம்வாய்ந்த விடுதலை இராணுவமாக மாவீரர்களின் அர்ப்பணத்தால் வளர்ந்து நிற்பதால் வந்தது. நாம் இந்திய இராணுவத்தால் அழிக்கப்படாததால், நிலைத்து நின்றதால் அந்த நிலை வந்தது.

இலங்கை இராணுவத்தால் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட போது மனம் சோர்ந்து அழிந்து விடாமையால் வந்தது. வன்னியிலே எம்மை அழிப்பதற்கு இலங்கை இராணுவம் தொடுத்த பெரும் இராணுவ நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டி வந்தது.

தமிழ் மக்களின் பலம் ஒருங்கிணைந்து இராணுவ பலமாக, பொருளாதார பலமாக, எமது மக்களின் அரசியல் பலமாக வளம்பெற்று, பலம் பெற்று நிற்கும்போது மாவீரர்களின் கனவு நனவாகும். தமிழினத்தையும் தமிழ்த் தேசியத்தையும் பலப்படுத்த தலைவரின் பின் அணி திரள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நோர்வேயின் உதவியை...

அதேவேளை - அரசாங்கத்தின் எந்தவொரு அமைச்சுப் பொறுப்புக்களையும் ஜே.வி.பி பெற்றுக்கொள்ள மாட்டாது. எமக்கு முன்னுள்ள பாரிய சவால் யாதெனில் இந்த நாட்டை பிளவுபடாமல் பாதுகாப்பதாகும்.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் வாக்களிக்கும் ஜனநாயக உரிமையை தடுத்துவிட்டனர். கிழக்கு மாகாண மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்த நிமிடத்தில் வடக்குடனான தொடர்புகளைத் துண்டித்து கிழக்கை வேறாக்க வேண்டும்.

வடக்கு - கிழக்கு மக்களின் வாக்களிக்கும் உரிமையை விடுதலைப் புலிகள் தடுத்தமைக்கு எதிராக ஐரோப்பிய யூனியனிடம் ஐக்கிய தேசியக் கட்சி முறையிடவுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய யூனியனிடம் ஐ.தே.க முறையிடவுள்ளமைக்கு எமது நன்றிகள். சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் விடுதலைப் புலிகளை ஜனநாயக நீரோட்டத்துக்குள் வரச் செய்ய முடியும்.

இலங்கையின் ஒருமைப்பாடு பாதிக்காத வகையிலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படவேண்டும். மகிந்த ராஜபக்ஷவுடன் செய்து கொண்ட உடன்பாட்டுக்கமைய நோர்வேயின் அனுசரணைப் பணியை ஜே.வி.பி கடுமையாக எதிர்க்கிறது. எனவே, இது தொடர்பாக எமது கட்சியின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா -

அரசாங்கத்துடன் ஜே.வி.பி. இணையவேண்டுமெனில் புதிய உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த வேண்டும். நாம் உடன்படிக்கையை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ என்ற தனி நபருடனேயே ஏற்படுத்தினோம். மாறாக கட்சியுடன் அல்ல. எமது தரப்பு கடமைகளை நிறைவேற்றியுள்ளோம்.

ஜனாதிபதி என்ற வகையில் அவர் தனது கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

அந்தச் சந்தர்ப்பத்தை - அதற்கான ஒத்துழைப்பை நாம் வழங்குவோம். இதுகுறித்து நாம் ஏற்கனவே பேச்சுக்களை நடத்தியுள்ளதால் மீண்டும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதா, அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பதா என்பது ஒரு பிரச்சினையல்ல.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவை வெற்றிபெறச் செய்வதற்காக ஜே.வி.பி. அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்கியது.

இதுதவிர வேறெந்த இணக்கப்பாடோ, உடன்படிக்கையோ எங்கள் மத்தியில் இல்லை. நாம் அரசாங்கத்துடன் இணைந்துகொள்வதானால் தனியானதொரு உடன்படிக்கையை ஏற்படுத்தவேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் நந்தன குணதிலக மற்றும் விஜித ஹேரத் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

## சமாதான செயலக பணிப்பாளராக ஜோன் குணரட்ண

கொழும்பு —

அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளராக ஜோன் குணரட்ணவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார். உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை சமாதான செயலக பிரதிப் பணிப்பாளராக ஜோன் குணரட்ண பணியாற்றி வந்தார். அரச சமாதான செயலகப் பணிப்பாளராக இருந்த ஜெயந்த தனபால, சமாதானப் பேச்சுக்களின் ஆலோசகராக செயற்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாவீரர்...

திருவுருவப்படத்துக்கு தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினியும் ஈகச்சுடர் ஏற்றினர்.

முதல் கரும்புலி கப்டன் மில்லர், முதல் பெண் கரும்புலி மாவீரர் கப்டன் அங்கயற்கண்ணி ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கும், ஏனைய மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கும் ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டன.

தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. நிதித்துறைப் போராளி பூங்குன்றன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் மாவீரர் வணக்க நடனங்களைத் தொடர்ந்து கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவு பொறுப்பாளர் கீதன், புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் ச.பொட்டு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

## பருத்தித்துறை...

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார்.

இதேவேளை, பலாலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட படுகாயமடைந்த சிப்பாய் ஒருவர் ஆபத்தான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் நேற்றிரவு அனுமதிக்கப்பட்டார்.

## அமைச்சர்கள்...

விஜேதாஸ ராஜபக்ஷவும் இந்தப் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்கவில்லை. அமைச்சுப் பொறுப்பு ஒதுக்கப்பட்டது குறித்து இவரும் அதிருப்தியடைந்துள்ளார்.

எனினும், நேற்று அவர் தனக்கு வழங்கப்பட்ட அமைச்சுப் பொறுப்பை ஏற்பதாக அறிவித்தார். இவ்வாறு சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பலர் அமைச்சுப் பதவி தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் முரண்படத் தொடங்கியுள்ளனர்.

இதனால் மகிந்த ராஜபக்ஷ மிகவும் விரக்தியடைந்துள்ள நிலையில் இருப்பதாகத் தகவல்கள் தெரிவித்தன.

## மாவீரர் எழுச்சி...

பகுதியிலிருந்து கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லம் வரையிலான பகுதிகள் யாவும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் வீதி இருமருங்கிலும் அலங்கரிக்கப்பட்டுக் காட்சியளிக்கிறது.

வர்த்தக நிலையங்கள், அரச- அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுக் காட்சி தருவதுடன், பிரதான வீதிகளிலிருந்து மாவீரர் துயிலும் இல்லம் வரையிலான பகுதிகளில் ஆங்காங்கே அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மாவீரர்களின் தியாகங்களைச் சித்தரிக்கும் பதாதைகளும் கட்டப்பட்டு வருகின்றன. பொது இடங்களில் விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டு மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு ஈகச்சுடரேற்றி, மலர் மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

மாவீரர் நாளை முன்னிட்டு முல்லை மாவட்டமும் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது.

வீடுகள் தோறும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. மாவீரர்களின் வீரவரலாற்றைக் கூறும் அலங்கார வளைவுகளும் கட்டப்பட்டுள்ளன.

சிரமதானப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. புதுக்குடியிருப்புப் பிரதேசமெங்கும் மாவீரர் நாள் செயற்பாடுகளில் மக்கள் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டுள்ளனர்.

முல்லை மாவட்டத்தில் கடற்புலிகளின் பிரதேசங்களில் மாவீரர் நாள் செயற்பாட்டில் மக்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கொட்டும் மழையிலும் மாவீரர் நாள் நடவடிக்கைகள் தமிழீழம் எங்கும் உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனிடையே, மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ தேசியக்கொடி மற்றும் பதாதைகளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு படையினரும் பொலிஸாரும் அனுமதி மறுத்துள்ளனர்.

டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்ட இந்தக் கொடிகளையும், பதாதைகளையும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்ல அனுமதிக்குமாறு சோதனைச் சாவடியில் இருந்த இராணுவத்தினரிடமும், பொலிஸாரிடமும் கண்காணிப்புக் குழுவினர் கோரிக்கை விடுத்த போதிலும் படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

## பிறந்தநாள் வாழ்த்து...

தனது பிறந்த தினத்தை கொண்டாடுகின்றார். அன்றைய தினம் ஜனாதிபதி அவருக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரை நேரடியாகச் சந்திக்க விரும்பும் விடயத்தை உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் என அமைச்சர்கள் சிலர் கருத்து தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

தேர்தல் காலத்தில் ஜனாதிபதி வேட்பாளர் என்ற முறையில் வெளியிட்ட மகிந்த சிந்தனையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை கூடிய விரைவில் அமுல்படுத்த வேண்டும். சில விடயங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரமோ, நாடாளுமன்ற அங்கீகாரமோ தேவையில்லை.

அமைச்சு மட்டத்தில் நிறைவேற்றக் கூடிய திட்டங்களை உடனடியாக ஆரம்பிப்பது எனவும் அமைச்சரவையில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

(01)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை கிருஷ்ணபிள்ளை

சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை கிருஷ்ணபிள்ளை அவர்கள் 22.11.2005இல் காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும், சின்னத்துரை (குவைத்), சிவகுமார் (குவைத்), திருமதி.நாகபூசணி, திருமதி கிருஷ்ணவேணி (முன்பள்ளி ஆசிரியர், பாரதி கலைமன்றம்) தவச்செல்வன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25-11-2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகிறீர்கள்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

தகவல் :
திருமதி கிருஷ்ணவேணி
(முன்பள்ளி ஆசிரியர், பாரதி கலைமன்றம்)

இப்பத்திரிகை இல.267 , நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.11.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மினிபஸ் சேவை இலக்கங்கள் தெளிவின்மையால் பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம் —

தனியார் போக்குவரத்துச் சேவையிலுள்ள மினி பஸ்கள் தமது பாதை ஒழுங்குகளைச் சரிவரத் தெரியக் கூடிய முறையில் பெயர்பலகைகளை அமைக்காமையாலும், பாதை ஒழுங்கு இலக்கம் தெளிவின்மையாலும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உட்படுகின்றனர்.

குறிப்பாக - பருத்தித்துறையிலிருந்து யாழ்.நோக்கி மேற்கொள்ளப்படும் 764 இலக்க மினிபஸ் சேவையின் இலக்கத்தின் தெளிவின்மையாலும், யாழ்ப்பாணத் திலிருந்து கச்சேரி ஊடாகப் பருத்தித்துறை செல்லும் மினிபஸ்ஸின் பாதை ஒழுங்கு துலக்கமில்லாமலும் இருப்பதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகுகின்றனர்.

இதனால் மேற்படி விடயங்களில் கூடிய அக்கறை எடுத்துப் போக்குவரத்து ஒழுங்கைச் சீராக்குமாறு மக்கள் கேட்டுள்ளனர். (12)

## போக்குவரத்து சிரமம்

யாழ்ப்பாணம் —

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் சங்கானை, சித்தன்கேணிப் பகுதிகளில் பல மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. சித்தன்கேணி - சங்கான பிரதான வீதியில் நிழல் மரங்கள் பல முறிந்து வீழ்ந்ததால் போக்குவரத்துச் சிரமங்களும், வீதிக்குச் சேதங்களும் ஏற்பட்டுள்ளது.

## அரச சேவை ஆணைக்குழு நியமனத்தில் தாமதம்!

கொழும்பு —

அரச சேவை ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் பதவிக் காலம் எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதியுடன் முடிவடைந்தாலும், அரசியலமைப்பு சபை தற்பொழுது செயலற்றிருப்பதால் அரச சேவை ஆணைக் குழுவுக்கு புதிய அங்கத்தவர்களைச் சேர்ப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்க தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

இந்தக் குழுவுக்கு புதிய அங்கத்தவர்களை நியமிப்பது தாமதமானாலும், அரச சேவைகளை வழமையாக நடத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்தார். அத்துடன், அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்களை அடுத்த சில தினங்களில் நியமிப் பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (தே)

## மாவீரர்நாள் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் —

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் மாவீரர் நாளை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பும், சான்றிதழ் வழங்கலும் தமிழீழத் தேசியத் தலைவரின் 51 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்றும் மாணவர்களின் வசதி கருதி துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வும் - எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு மாணவர் பேரவை தலைமைச் செயலகத்தில் இடம் பெறவுள்ளன.

இதில் பேராசிரியர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாணவர்கள் கலந்து கொள்ள உள்ளதால்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். வெற்றியீட்டியவர்கள் வருகை தந்து, பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ மாணவர் பேரவையினர் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# 51 ஆவது பிறந்த தின வாழ்த்து



விடுதலை படை நகர்த்தலும்
வருங்காலத்திற்கான திட்டமிடலை
முன்கூட்டியே அறிந்து
செயற்படுத்தலும்
ஒரே முடிவு
போர் முறையின் இலட்சியமும்
தமிழர் விடுதலையும் என்று
சுட்டி நின்ற விரலுக்கும் நாவிற்கும்
வரலாறு உண்டாக்கி,
வழிகாட்டி
துப்பாக்கி ஏந்திய
போர் இலக்கணங்களில்
உலகம் திரும்பிப்பார்க்க
வைத்த
நடைமுறைகளுக்குள்ளே
கெரில்லாவாகவும் வளர்ந்து
இராணுவமாகவும் எல்லையில் நின்று
தமிழர் பகுதிகளைக் காக்கும்
பாதுகாவலனாகவும் – இன்று
போர் வெற்றியினால் பேசவந்த
எதிர்த்தரப்பிடம்
எமது நிலைப்பாட்டை உறுதிப்படுத்தி
தன்னாட்சி கொண்ட
இடத்தினை உருவாக்கி
உலகத்தமிழ்ப் பெருந்தலைவராக
வலம் வரும் எங்கள் தலைவரை
வாழ்த்துறோம்.

*இயக்குனர், ஆசிரியர்கள்,*
*மாணவர்கள்.*
*கொம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்*
*மணியம் கட்டடம் (மேல்மாடி)*